விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆடி 21 திங்கட்கிழமை (06.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 230



இன்று ஆரம்பமாகும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள அனைத்து மாணவச் செல்வங்களும் சிறந்த பெறுபேறுகளை பெற மனதார வாழ்த்துகின்றோம்.
–வலம்புரி கல்விப்பிரிவு

# தமிழின அழிப்பாளர்களே முதலமைச்சரை எதிர்க்கின்றனர்

## பாடம் புகட்ட மக்கள் அணிதிரள்வர்

**(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கடும்போக்குடன் செயற்படுபவர்களுக்கு தக்க பாடம் புகட்ட பொதுமக்கள் அணிதிரளவுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.**

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்து வரும் நிலையில்,

அதனை நசுக்கும் முகமாக, ஒரு சிலர் தீவிரமாகச் செயற்படுகின்றனர். இவர்களின் பின்னணியில் தமிழின அழிப்பை மேற்கொண்ட பேரினவாத சக்திகள் இருப்பதாகவும் தமிழின அழிப்பாளர்களின் வழிகாட்டலிலேயே முதலமைச்சருக்கு எதிராக ஒரு சிலர் செயற்படுவதாகவும் கூறப்படுகிறது.

எனவே இத்தகைய தமிழின அழிப்பு நடவடிக்கையில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தக்க பாடம் புகட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டதாக அணிதிரளவுள்ள பொது மக்களின் சார்பில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் 23☛

## முல்லைத்தீவு மாவட்டத்தில் விகாரை அமைக்க அனுமதி

### சாந்தி எம்.பி குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில், 60 அடி உயர தாதுகோபத்துடன் கூடிய விகாரையொன்றையும் பௌத்த பிக்குகளுக்கான, விடுதியொன்றையும் அமைப் 23☛

### தேசிய காவற்துறை

## ஆணைக்குழுவின் கீழ் 7 குழுக்கள் நியமனம்

(கொழும்பு)

மக்கள் முகம் கொடுக்கின்ற அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் தேசிய காவற்துறை ஆணைகுழுவின் கீழ் 7 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. தேசிய காவற்துறை ஆணைக்குழு இதனை தெரிவித்துள்ளது.

போதைப்பொருள், வீதி விதிமுறை மீறல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் 24☛

## கொழும்பு நோக்கி பயணித்த ரயில் மீது கல்வீச்சு தாக்குதல்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்தின் மீது கல்லெறி தாக்குதல் நடத்தப்பட்டதில் ஒருவர் மயக்கமடைந்தார்.

யாழ். பிரதான புகையிரத நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த இரவு தபால் புகையிரதமானது நேற்று இரவு 7 மணியளவில் கிளிநொச்சி புகையிரத நிலையத்தை கடக்கும் நிலையில் அதன் மீது கல்லெறி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில், புகையிரதத்தில் பயணித்த பயணியொருவரும் கல்லெறி தாக்குதலுக்குள்ளாகி மயக்கமடைந்திருந்தார்.

இதனையடுத்து புகையிரதத்தின் அவசர நிறுத்தல் 23☛

## கொக்குவில் பகுதியில் விபத்து பொலிஸாரும் இளைஞரும் காயம்

(யாழ்ப்பாணம்)

வேகமாக சென்ற இளைஞர்களை பொலிஸார் மறிக்க முற்பட்ட போது இடம்பெற்ற விபத்தில் சிக்கி பொலிஸாரும் இளைஞரும் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில், கொக்குவில் பொற்பதி வீதி பகுதியில் நேற்று மாலை பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வீதி வழியாக இளைஞர்கள் இருவர் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர்.

அவர்களை பொலிஸார் துரத்தி சென்று இடைமறித்துள்ளனர். அப்போது இரு பகுதியினரும் விபத்துக்குள்ளாகியிருந்தனர். மோட்டார் சைக்கிளில் பயணித்த 23☛

## தந்தையின் உடலத்தை வணங்கி பரீட்சைக்கு சென்ற மாணவி!

### அம்பாறையில் சோகம்

(அம்பாறை)

வீட்டில் வைக்கப்பட்டிருந்த தந்தையின் உடலத்தை விழுந்து வணங்கி நேற்று காலை 5-ம் தர புலமை பரிசில் பரீட்சை எழுத சென்ற மாணவி தொடர்பில் அம்பாறை, தமன, மரியகந்த பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. 23☛

## சைக்கிளை திருடமுற்பட்ட சந்தேகத்தின் பேரில் தாயும் மகளும் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர் பகுதியில் சைக்கிளை திருட முற்பட்டதாக சந்தேகத்தின் பேரில் தாயும் மகளும் நேற்று யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை யாழ்.நகர் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளை தாயும் மகளும் திருட முற்பட்டுள்ளனர் அதை 23☛

## தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுவதை ஏற்க முடியாது

### உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து நிறைவேறாத அரசியல் தீர்வு தொடர்பில் குறிப்பிட்டு தமிழ் மக்களை தொடர்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏமாற்றுவதை ஏற்றுக் 24☛



## மகிந்தவும் மைத்திரியும் ரணிலும் இணைந்தால்தான் அரசியல் தீர்வு

### மாவை சேனாதிராசா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒன்றிணைந்தே தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வொன்றை காணவேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் அரசியல் தீர்வு வழங்குவதாக குறிப்பிட்டே ஆட்சிக்கு வந்தது. ஆகவே வழங்கிய வாக்குறுதியை.ஒரு 23☛

### சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடவே

## மக்கள் எம்மை ஆட்சிக்கு கொண்டு வந்தனர் - ராஜித

(கொழும்பு)

நாட்டில் படித்த புத்திசாலிகள் கூட இன்னும் வறுமை மனநிலையில் இருந்து செயற்பட்டு வருகின்றனர் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசும் 24☛



## கல்வி மட்டும்தான் எமக்கு ஒரேயொரு திடமான பாதுகாப்பு - வடக்கு முதல்வர்

(யாழ்ப்பாணம்)

கல்வி தான் எமது ஒரேயொரு திடமான பாதுகாப்பு என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஆசிரியர்கள் பணத்திற்கும் சொகுசு வாழ்க்கைக்கும் அடிபணியாது மாணவர்களை முறையாக வழிகாட்டி நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு பாடுபடவேண்டும் என தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பாடசாலைகளில் பணிபுரிவதற்கான பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு 23☛



## கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின்
## 44ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும்-2018

காலம்:-11.08.2018 சனிக்கிழமை
(ஆடி அமாவாசை தினத்தன்று)
இடம்:-கூவில் தீபஜோதி விளையாட்டுக்கழக மைதானம்

**வெளிக்கழகங்களுக்கான காலை நிகழ்வுகள்**

15KM மரதன் ஓட்டம் (கட்டணம் ரூபா 100)
நேரம்:-காலை 6.00 மணி
இடம்:-கிராமக்கோட்டுச்சந்தி

40KM சைக்கிள் ஓட்டம்
(அனுசரணை:கிருபா லேனேர்ஸ்) (கட்டணம் ரூபா 200)
நேரம்:-காலை 7.00 மணி
இடம்:-கிராமக்கோட்டுச் சந்தி

**வெளிக்கழகங்களுக்கான மாலை நிகழ்வுகள்**

1500M ஓட்டம், பலூன் உடைத்தல், கீறீஸ்கம்பம் ஏறுதல்
(கட்டணம் ரூபா 50)
நேரம்:-மாலை 4.30 மணி
இடம்:-தீபஜோதி விளையாட்டுக்கழக மைதானம்

**கயிறு இழுத்தல்**

காலம்:-09.08.2018 வியாழக்கிழமை
மாலை 4.00 மணி
இடம்:-தீபஜோதி விளையாட்டுக்கழக மைதானம்
பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதனால்
அனைத்து கழக வீரர்களையும் தவறாது
பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:-
வ.கோபிநாத்-0769360449,
த.அஜித்குமார்-0768383476,
ந.கணேசலிங்கம்-0771127755,
அ.பிரசன்னா-0779242332

தீபஜோதி சனசமூக நிலையம்,
தீபஜோதி விளையாட்டுக்கழகம்,
தீப்ஜோதி கல்விக்கழகம்,
தீபஜோதி முன்பள்ளி

(சி-3445)

## மரண அறிவித்தல்
## சண்முகம் மார்க்கண்டு



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம், சிவநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் மார்க்கண்டு நேற்றுமுன்தினம் (04.08.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-பார்வதி தம்பதியினரின் அன்பு மகனும், ஐயம்பிள்ளை-தையலம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், சிவக்கொழுந்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செங்கமலம், கணபதிப்பிள்ளை, கந்தையா, தையலம்மை, ஐயம்பிள்ளை, நடராசா, தம்பு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குமாரசாமி, கனகம்மா, வள்ளியம்மை, முத்தையா, தெய்வானை, இரத்தினம், புவனம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற மாசிலாமணி, வசந்தகோகிலம் (பிரான்ஸ்), மகேந்திரராஜா, யோகராஜா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சற்குணராஜா, காலஞ்சென்ற மனோகரசீலன், மீனலோஜினி (அதிபர்-கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குகேந்திரராஜா (பிரான்ஸ்), சித்திரா, மீனாம்பாள் (பிரான்ஸ்), மதிவதனி (பிரான்ஸ்), இதயசிவதாஸ் (அதிபர்-கிளி/கோணாவில் ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுபாஜினி-தனபாலன் (பிரான்ஸ்), சுதாஜினி-மங்களேஸ்வரன், சுரேஸ்கரன்-சுரேகா, சுதாகரன்-டலா, சுரேஜினி-விஜியந்தன், ரஜனிகாந்-கமலி, மதனரூபன், சுமன், சோபா, சுயா-தீபன், திவ்வியா, ரூபியா, சர்மியா, கோபிகா-கஜேந்திரா, பிரசன்னா-பிரேமலதா, பிரசாந்-டெல்டின், அனுசிகா-சித்திராங்கன், பிரகாஸ், சங்கீர்த்தனா ஆகியோரின் பேரனும், ஆதீஸன், அஸானி, ஸ்ரேஜன், ஸ்ரேஜா, ஸ்ரேனி, காவியன், கவிநன், விலுஷன், விஷ்யன், விபிசன், சனோஜன், மினேகன், மினேகா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2018) திங்கட்கிழமை அவரது இல்லமான இல.34/1 சிவநகர் உருத்திரபுரத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 4.00 மணிக்கு உருத்திரபுரம், இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-க.இதயசிவதாஸ் மருமகன்
தொடர்பு:இலங்கை-0774463373, 0777403064
பிரான்ஸ்-0033662353252

உருத்திரபுரம்
சிவநகர்

(சி-3452)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 18.07.2017 சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர் கந்தையா உதயராசா**

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று 06.08.2018 திங்கட்கிழமை பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய வீதி,
ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.

(5274)

இங்ஙனம்:-
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சண்முகம் மார்க்கண்டு



கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலய அதிபர் திருமதி **மீனலோஜினி இதயசிவதாஸ்** அவர்களது அன்பு தந்தையும், கிளி/கோணாவில் ம.வி அதிபர் திரு.க.இதயசிவதாஸ் அவர்களது மாமனாருமாகிய அமரர் **சண்முகம் மார்க்கண்டு** அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(சி-3450)

**கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்**
**கிளிநொச்சி**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 - 11 - 1944



உதிர்வு 19 - 07 - 2017

**அமரர் தேவசிகாமணி குமரகுரு**
(பாஸ்ஜயா)

திதி:07.08.2018 (அபரபட்ச ஏகாதசி)

எமது குடும்பத்தின் தீபஜோதியாய் விளங்கி எம்மை அன்புடன் பேணி வளர்த்து எமக்கு நல்வழி காட்டி எம் வாழ்வில் ஒளியேற்றி எம்மை நன்னிலையில் வைத்து விட்டு அமரத்துவம் அடைந்த எம் அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.

வல்வெட்டித்துறை ஆலடி ஒழுங்கையைச் சேர்ந்த எமது குடும்ப தலைவர் அமரர் தே.குமரகுரு அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு கூரலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் அன்னாரது இல்லத்தில் நாளை (07.08.2018) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**
**0773068750**

(சி-3439)

# வரிச்சுமையை மறைக்கவே 'கொடுப்பனவு அதிகரிப்பு'

## பிரசன்ன ரணதுங்க சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டு மக்களின் வரிச் சுமை அதிகரிப்பை மூடி மறைப்பதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு தொடர்பான விடயத்தை அரசாங்கம் கையில் எடுத்துள்ளதாக ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உடுகம்பொல பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவை அதிகரிப்புச் செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பரீட்சைக்குச் சென்ற மாணவியை காட்டு யானை தாக்கியது!

(மகியங்கனை)

நேற்று இடம்பெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தனது தாயுடன் துவிச்சக்கர வண்டியில் சென்ற மாணவி ஒருவர், மகியங்கனை பிரதேசத்தில் காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவி மகியங்கனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-7)

# புலிகள் மீதான தடையை மேலும் 6 மாதங்கள் நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை அரசின் தொடர் அழுத்தங்களால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய சபை தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரஸல்ஸில் ஒன்றுகூடிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பயங்கரவாத-எதிர்ப்பு வல்லுநர்களின் ஆலோசனைக்கு அமைவாகவும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் விதிமுறைகளின் அடிப்படையிலும் புலிகளுக்கு எதிரான தடையினை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் சபை தீர்மானித்துள்ளது.

இதேவேளை, கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி மீண்டும் விடுதலைப் புலிகளை, தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் பட்டியலில், ஐரோப்பிய ஒன்றியச் சபை இணைத்திருந்தது.

இதனை மீண்டும் நீடிப்பதற்கு தாம் சட்ட ரீதியாக பல சவால்களை எதிர்கொண்டு புலிகளால் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் இருப்பதனை நிரூபித்திருப்பதாகவும் அதற்காக பல ஆவணங்களைச் சமர்ப்பித்ததாகவும் பிரஸல்ஸிற்கான இலங்கைத் தூதுவர் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக "விடுதலைப் புலிகளால் தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் இருப்பது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 28 உறுப்பு நாடுகளையும் நம்ப வைத்துள்ளோம்" வெளிநாட்டு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் கொழும்பிலுள்ள சட்ட அமுலாக்க மற்றும் பிற தொடர்புடைய முகவர்களின் உதவியுடன் தேவையான தகவல்களைத் திரட்டி பிரஸல்ஸிலுள்ள தூதரகம், பிரஸல்ஸில் சந்திக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பயங்கரவாத-எதிர்ப்பு வல்லுநர்களின் கருத்துக்களுக்கு அமைவாக புலிகள் மீதான தடையை நீடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் ரொட்னி பெரேரா தெரிவித்துள்ளார். (இ-7)

# வடக்கில் 194 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்







(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3 ஆம் வகுப்பு 1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு தெரிவுசெய்யப்பட்ட 194 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் கடந்த 2018.06.19 நடந்த திறந்த போட்டிப்பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்த 353 விண்ணப்பதாரர்கள் கடந்த 2018.07.17, 18 ஆம் திகதிகளில் வட மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையுடன் இணைந்த பிரத்தியேக பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். அவர்களில் தெரிவு செய்யப்பட்ட 194 பேருக்கு ஆசிரிய நியமனக் கடிதங்கள் வழங்கப் பட்டன.

நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 21 நாட்கள் முன்சேவை பயிற்சி வழங்கப்படவுள்ளது. அதன் பின்னரே நியமனம் உறுதிப்படுத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு நியமனங்களை வழங்கினர்.

இதில் கல்வித்திணைக்கள அதிகாரிகள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# பட்டதாரிகள் விடயத்தில் அரசு ஒருபோதும் தப்பிக்க முடியாது

## தேசிய சுதந்திர முன்னணி

அரசாங்கம் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பிலிருந்து ஒருபோதும் தப்பிக்க முடியாதென தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. தேசிய சுதந்திர முன்னணி நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"நாட்டில் வேலையில்லா பட்டதாரிகள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் இதுவரை காலமும் எந்தவொரு அரசாங்கமும் முன்னெடுக்காத செயற்பாட்டைத்தான் பட்டதாரிகள் விடயத்தில் நல்லாட்சி அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில் எது எவ்வாறாயினும் இவ்வரசாங்கம் பட்டதாரிகள் விடயத்தில் உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்காவிடின் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்" என அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களிடம் விடைகளை யாரும் கேட்க வேண்டாம்

## கல்வியமைச்சர் காரியவசம் வேண்டுகோள்

(கொழும்பு)

புலமைப்பரிசில் பரீட்சைக் குத் தோற்றிய மாணவர்களிடம் எவ்வாறு கேள்விகளுக்கு விடையளித்தீர்கள், என்ன விடையளித்தீர்களென தேவையற்ற வினாக்களை எழுப்பி, அழுத்தங்களை விடுக்க வேண்டாமென, பெற்றோர்களிடம் கல்வி அமைச்சர் அகில



விராஜ் காரியவசம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நேற்று இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து கல்வி அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன், குறித்த பரீட்சையை ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடத்துவதற்கு தேசிய மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டமைக்கான காரணம் பாடசாலை மாணவர்கள் பரீட்சை முடிந்து சுதந்திரமாக விடுமுறைக் காலத்தைக் கழிப்பதற்காகவெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# நாட்டில் தேரர்கள் மோசமாக நடத்தப்படுகின்றனர்



## மகிந்த ராஜபக்ஷ கவலை

(கொழும்பு)

மகா சங்கத்தினருக்கான ஒழுக்கக் கோவையை தயாரிக்கும் விடயத்தில் பாரிய பிரச்சினைகள் உள்ளதாகவும் இந்த விடயத்தில் தான் தலையிட்டால், அதற்கு வேறு விளக்கம் கொடுக்க ஒவ்வொருவரும் முற்படுவார்கள் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று குருநாகலில் இடம்பெற்ற சமய நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார்.

மகா நாயக்கர்கள் விரும்பம் தெரிவித்துள்ள விடயங்களில் சிறிய தேரர்களுக்கு உடன்பாடில்லாத நிலைமை காணப்படுகின்றது. இதனை மகாநாயக்கர்களும் தேரர்களும் பேசித் தீர்த்துக் கொண்டால் மாத்திரமே இப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனவும் மகிந்த சுட்டிக்காட்டினார். நாட்டில் தேரர்களுக்கு நடக்கும் அநீதிகளை அனுமதிக்க முடியாதுள்ளது. விமான நிலையத்தில் விமானத்தில் ஏற்றப்பட்ட பின்னர், பயணப் பொதிகளை வெளியில் எறிந்து விமானத்தை நிறுத்தி தேரர் வெளியேற்றப்படுகின்றார். உடுவே தம்மாலோக தேரருக்கு இவ்வாறு நடைபெற்றது எனவும் மகிந்த ராஜபக்ஷ நினைவு கூர்ந்தார். (இ-7)

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா

## ● அறிமுக ஹென்றிக்ஸ் அசத்தல் சதம் ● சகலதுறைகளிலும் இலங்கை சொதப்பல்



ஒருநாள் போட்டியில் அதிவேக சதம் அடித்த அறிமுக வீரர் என்ற சாதனை படைத்தார் தென்னாபிரிக்காவின் ஹென்றிக்ஸ். இவரின் விளாசல் கைகொடுக்க தென்னாபிரிக்கா 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி தொடரை கைப்பற்றியது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்கா 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகள் முடிவில், தென்னாபிரிக்கா 2-0 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் மூன்றாவது ஒரு நாள் போட்டி கண்டியில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

தென்னாபிரிக்கா அணியில் ரீசா ஹென்றிக்ஸ் அறிமுக வாய்ப்பு பெற்றார்.

### ஹென்ரிக்ஸ் சதம்

தென்னாபிரிக்க அணிக்கு குயின்ரன் டி கொக் (2) ஏமாற்றினார். அரைச்சதம் கடந்த அம்லா (59) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் டு பிளசி (10) நீடிக்கவில்லை. ஹென்ரிக்ஸ் 88ஆவது பந்தில் சதம் எட்டினார். இவர் 102 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். டுமினி (92) சத வாய்ப்பை இழந்தார். மில்லர் 51 ஓட்டங்களை விளாசினார்.

50 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 363 ஓட்டங்களை எடுத்தது.

பெலுக்வாயோ (24) ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் இலங்கை சார்பில் அதிகபட்சமாக திசர பெரேரா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

### லுங்கிடி கலக்கல்

கடின இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு லுங்கிடி நெருக்கடி கொடுத்தார். இவரது 'வேகத்தில்' உபுல் தரங்க (19), டிக்வெல (10) ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் மத்யூஸ் (32) கைவிட்டார். தனஞ்செய டி சில்வா (84) அரைச்சதம் அடித்து ஆறுதல் கொடுத்தார்.

இறுதியில் இலங்கை அணி 45.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 285 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 78 ஓட்டங்களால் வீழ்ந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் அதிகபட்சமாக லுங்கிடி 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக தென்னாபிரிக்காவின் ரீசா ஹென்ரிக்ஸ் தெரிவானார்.

இவ்வெற்றி மூலம், 5 போட்டிகள் கொண்ட தொடரை இரண்டுபோட்டிமீதமுள்ளநிலையில்தென்னாபிரிக்கா 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவது போட்டி நாளை மறுதினம் கண்டியில் ஆரம்பமாகிறது.

### அதிவேக சதம்

28 வயதான தென்னாபிரிக்காவின் ரீசா ஹென்ரிக்ஸ் 88 பந்துகளில் சதம் கடந்தார். இதன்மூலம், ஒரு நாள் அரங்கில் அறிமுக போட்டியில் அதிவேக சதம் விளாசிய வீரர் என்ற சாதனை படைத்தார்.

இதற்கு முன், ஹொங்கொங்கின் மார்க் சாப்மேன் 103 பந்துகளில் (எதிர் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், 2015, டுபாய்) சதம் அடித்ததே சாதனையாக இருந்தது.

### மூன்றாவது வீரர்

ஒரு நாள் அரங்கில் அறிமுக போட்டியில் சதம் அடித்த 3ஆவது தென்னாபிரிக்க வீரர் என்ற பெருமை பெற்றார் ஹென்ரிக்ஸ்.

ஏற்கெனவே, கொலின் இன்கிராம் (எதிர் - சிம்பாப்வே, 2010, போம் போன்டெய்ன்), பாவுமா (எதிர் - அயர்லாந்து, பினோனி, 2016) இந்த இலக்கை எட்டி இருந்தனர். ஒட்டுமொத்தமாக இந்த சாதனையை நிகழ்த்திய 14ஆவது சர்வதேச வீரரானார் ஹென்ரிக்ஸ்

# பங்களாதேஷ் பதிலடி



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2ஆவது 'ரி20' போட்டியில் 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று பங்களாதேஷ் பதிலடி கொடுத்தது.

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் அமெரிக்கா சென்றுள்ள பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

செயின்ட் கிட்ஷில் நடந்த முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ரி20 போட்டி லாடர்ஹில்லில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ் (1), முஷ்பிகுர் ரஹிம் (4) சொதப்பினர். சௌமியா சர்கார் 14 ஓட்டங்கள் எடுத்தார். தமிம் (74), அணித் தலைவர் சகிப் (60) அரைச்சதம் கடந்தனர்.

20 ஓவர்கள் நிறைவில் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 171 ஓட்டங்களை எடுத்தது.

### 'திரில்' வெற்றி

பின், களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணிக்கு லீவிஸ் (1), ரசல் (17), ராம்டின் (5) ஜொலிக்கவில்லை. சகிப் 'சுழலில்' சாமுவேல்ஸ் (10) ஆட்டமிழந்தார். பிளட்சர், பவெல் தலா 43 ஓட்டங்கள் சேர்த்தனர்.



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள்தேவைப்பட்டது. நஜ்முல் 'சுழலில்' நர்ஸ் (16), கீமோ பால் (2) சிக்க, இறுதி ஓவரில் 2 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தது.

20 ஓவர்கள் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணிசார்பில் அதிகபட்சமாக முஸ்டபிசுர், நஜ்முல் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ்வெற்றி மூலம், தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது.


நல்வாழ்த்தும் நன்றி நவிலலும்



கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ சங்க தலைவராக பொறுப்பேற்கும்

கௌரவ
செல்லப்பா
செல்வராசா

அவர்களின்
பணி சிறக்க வாழ்த்துவதோடு
"இதனை இதனால் இவன் முடிப்பான்
என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்"
என்ற வள்ளுவரின்
வாய்மொழிக்கேற்ப தகுதியான
தலைமையை 7-0 என்ற சாதனை
பதிவோடு தந்திட்ட எம்பிரதேச
ஆன்றோர்கள்,
சான்றோர்கள்
மற்றும் கூட்டுறவாளர்கள்
அனைவருக்கும் நெஞ்சார்ந்த
நன்றியை
தெரிவித்துக் கொள்கிறோம்.


வாழ்த்துவோர்:-
சி.சிதம்பரநாதன்,
மு.தவராசா,
ஆ.சங்கர்

(C-3451)

# கோத்தபாய மீதான யுத்தக்குற்றங்கள் தொடர்பில் ஆராய்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ களமிறங்குவதைத் தடுக்கும் வகையில், அமெரிக்கத் தூதரகம் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



இந்த இரகசிய முன்னெடுப்பின் ஒரு அங்கமாக, காணாமற்போனோர் தொடர்பிலான முறைப்பாடுகளை ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகமவிடம், அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரிகள், கோத்தபாய மீதான யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோத்தபாய ராஜபக்ஷ, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், களமிறங்குவதை தடுக்கும் வகையில் அவர் மீதான யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான அறிக்கை தமக்கு வேண்டுமென, தூதரக அதிகாரிகள் கோரியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

வெள்ளைக்கொடி விவகாரம், காணாமற்போனோர் தொடர்பிலான விடயம் மற்றும் நபர்கள் கடத்தப்பட்ட சம்பவங்களுடன் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளருக்கு தொடர்புகள் குறித்து அமெரிக்கத் தூதரகம் ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான நடேசன், இராணுவத்திடம் சரணடைந்ததன் பின்னர் கோத்தபாய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமையவே படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பிலும் அமெரிக்கத் தூதரகம் அவதானம் செலுத்தியுள்ளது. (இ-7)


## விற்பனைக்கு

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டியில் சமையலறை மற்றும் 3அறைகள் கொண்ட வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
077 062 3444

(5203)



## யாழ்ப்பாணம்-கோட்டை
## ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தானத்தின்
## இரதோற்சவம்~2018



முன்னவனே கோட்டை முனியப்பா
யாழ்.நகரில் மன்னும் பரனே
மகாதேவா பொன்னும் பதமும்
கலையாவும் பாலிப்பாய் என்றன்
இதயம் தனிலே இருந்து

25ஆம் நாள் திருவிழா 06.08.2018 இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும். மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று இரதபவனி இடம்பெறும். 26ஆம் நாள் திருவிழா 07.08.2018 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவத்தைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். 27ஆம் நாள் திருவிழா 08.08.2018 புதன்கிழமை மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து பூங்காவனம் இடம்பெறும். 28ஆம் நாள் திருவிழா 09.08.2018 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு வைரவ சாந்தியுடன் நிறைவுபெறும்.

இரதோற்சவத்தை சிறப்புற வாழ்த்துவோர்:

**கிருபா லேணர்ஸ்** **ம.லோகராஜன் குடும்பம்**

Regd No.DS/589, Kiruba Learners, Govt.Approved A Grade Driving Training School

அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், தொ.இல: 021 222 4353, 021 492 3200, 077 722 5292

(8-3441)


## இராசி பலன்

**மீனம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மேடம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி பெறுவீர்கள், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்,சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் கிடைக்கும்.

**இடபம்:** பல நாட்களின் பின்னர் உறவினர் ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** புதிய நட்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய் தொழில் முன்னேற்றமுண்டு, சிறப்பான நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**இராசி பலன் — கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | சந் | |
| | இராசி பலன் கிரகநிலை | | சூரி, புத, ராகு |
| செவ், கேது | சந்திராஷ்டமம் விசாகம் | | |
| சனி | | குரு | சுக் |

06.08.2018
ஆடி 21, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
தசமி பின்னிரவு 4.00 மணிவரை
கார்த்திகை முற்பகல் 10.55 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை

வளவன்


**தனுசு:** வருங்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும் நாள், உடல் நலன் சீராகும், கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** முயற்சிக்கேற்ப ஆதாயம் கிடைக்கும், களஸ்திர நன்மையுண்டு, நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, அடுத்தவர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** சாமர்த்தியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பாக்கிகள் வசூலாகலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

# இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையம் இனந்தெரியாதநபர்களால் அடித்து சேதம்



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி, இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையம் இனந்தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் இரவு அடித்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.


குறித்த சனசமூக நிலையம் காலை முதல் இரவு 10.30 மணி வரை திறந்திருக்கும். மாலை நேரத்திலேயே அதிகளவு வாசகர்கள் வந்து செல்வது வழமையாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சனநடமாட்டம் இல்லாத நேரம் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த 3 நபர்கள் சனசமூக நிலையத்தின் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். ஜன்னல் கண்ணாடிகள் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

சத்தம் கேட்டு அயலர்கள் வந்து பார்த்தபோது குறித்த நபர்கள் தப்பியோடியுள்ளனர். குறித்த நபர்கள் நிலையத்தை தாக்குவதற்கு முன்னர் பத்தமேனியிலுள்ள இரு வீட்டின் மீதும் தாக்குதல் நடத்திவிட்டே வந்துள்ளார்கள் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து அச்சுவேலி பொலிஸாருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். குறித்த சனசமூக நிலையத்துக்கு அதிகமான வாசகர்கள் தினமும் வந்து செல்வதாகவும், இந்தச் சம்பவம் வாசகர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் எனவே இது குறிதது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் வாசகர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-9)

# பழனி வேல்பவனி உற்சவம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலயத்தின் ஸ்ரீ பழனி வேல்பவனி உற்சவம் அண்மையில் இடம் பெற்றது. (இ-30)

# ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரியாக வைத்தியர் நந்தகுமார் நியமனம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய வைத்தியர் ப.நந்தகுமார், அரச இடமாற்றக் கொள்கைக்கு அமைய ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பிரதேசங் களுக்கான சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கபபட்டுள்ளார்.

வைத்தியர் கற்கையை நிறைவுசெய்த பின்னர் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்ட ப.நந்தகுமார், சங்கானை பதில் சுகாதார வைத்திய அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டு சிறிது காலம் பணியாற்றினார்.

குறிப்பாக தெல்லிப்பழைப் பிரதேசக் கடைகளில் புகையிலை, பீடி, சிகரெட், சுருட்டு போன்ற போதைப் பொருட்களைச் சட்டத்திற்குப் புறம்பாக விற்பனை செய்வதை முற்றாகத் தடுத்து நிறுத்தியதுடன் இலங்கையில் தெல்லிப்பழையே இவ்வாறான போதைப் பொருட்களை விற்பனை செய்வதை நிறுத்திய முதலாவது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு என்ற பெருமையைப் பெறக்காரணமாக இருந்தார்.

அத்துடன் தாய்மார் கழகங்களை அமைத்து சிறப்பாக நெறிப்படுத்தினார். இயற்கை விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்தார். மானிடம் அறக்கட்டளை மூலம் இயற்கை விவசாயத்தை மேம்படுத்தி நஞ்சற்ற மரக்கறிகளை உற் பத்தி செய்து பொது மக்களுக்கு விநியோகிக்கும் பணிகளை ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

இந் நிலையில் காரைநகர் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களுக்கான சுகாதார வைத்திய அதிகாரியாக 2018.07.30 ஆம் திகதி முதல் நியமனம் பெற்றுள்ளார். (இ-9)

# இயல்பான மனோநிலையில் பரீட்சைக்கு முகங்கொடுங்கள்

## மாணவர்களுக்கு மாகாண கல்வியமைச்சர் சர்வேஸ்வரன் வாழ்த்து



(யாழ்ப்பாணம்)

இன்று க.பொ.த. உயர். தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் மிக உயர்வான சித்திகளைப் பெற்று எமது மாகாணத்திற்கும், தாம் சார்ந்த பாடசாலைகளுக்கும், பெற்றோர்களுக்கும் பெருமைகளைத் தேடித் தர வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

ஒரு மாணவனின் வாழ்வின் அடுத்த படி நிலையைத் தீர்மானிக்கும் இந்தப் பரீட்சையின் முடிவு பல் கலைக்கழகக் கல்வி மட்டுமல்லாது, ஏனைய துறை சார்ந்த கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்களுக்கான ஒரு திறவு கோலாகவும் இருப்பதால் பதற்றமடையாது இயல்பான ஒரு மனோ நிலையில் பரீட்சைக்கு முகம் கொடுக்கும் மனோ வலிமையை ஆண்டவன் உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்க வேண்டும் என்று எங்கள் ஒவ்வொருரினதும் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்தவருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வடமாகாணம் முதலாவது இடத்தைப் பெற்றுப் பெருமை சேர்த்தது போல் இந்த ஆண்டும் எமது மாணவர்கள் அதி உயர் சித்தியைப் பெற்றுக் கூடிய ளவுக்கு அதிசிறப்புச் சித்தியைப் பெறுவதற்காக மேலும் முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு வடக்குமாகாண கல்வி, பண்பாட்டலு வல்கள விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் சார்பில் வடமாகாணக் கல்வி அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் இந்த வாழ்த்துச் செய்தியினைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# "தீரன் கலங்குவது இல்லை" பகவத்கீதை விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசனந்தாவால் வாரந்தோறும் திங் கட்கிழமைகளில், ஸ்ரீமத் பகவத் கீதை விளக்கவுரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை யாழ்.சின்மயா மிஷனில், (இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்) என்னும் விலாசத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று திங்கட் கிழமை - அன்று ஸ்ரீமத் பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில், " தீரன் கலங்குவது இல்லை"என்ற தலைப்பில் விரிவுரை இடம் பெறும்.


இவ் விரிவுரை, நேரலையாக, Chinmaya Mission,Jaffna எனும் முக நூல் பக்கத்தில், ஒளிபரப்பப்பட இருக்கின்றது.

எனவே, ஆர்வலர்கள் அனைவரும் தங்கள் இல்லங்களில் இருந்தவாறே கண்டு, கேட்டுப் பயன் பெறலாம். மேலதிக தகவல்களுக்கு 021 222 3447 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.(இ-7)




மீசாலை விக்னேஸ்வர மகா வித்தியாலயத்தின் பரிசில் நாள் வைபவம் கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வித்தியாலய கலையரங்கத்தில் இடம் பெற்றது. வித்தியாலய முதல்வர் சு.சிவானந்தன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரான்ஸ் நாட்டின் பழைய மாணவரும் ஆசிரியர் சங்கத் தலைவருமாகிய ந.ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினர்களாக பழைய மாணவரும் சாவகச்சேரி நகராட்சி மன்ற உப தவிசாளருமான அ.பாலமயூரன், தென்மராட்சி பிரதேச செயலக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செ.ஜெகதீபன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர்களான த.பரமானந்தம், கோ.சுதந்திரநாதன், கு.கலாரஞ்சினி, கு.பவானி ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-சுபேசன்)





அருட் கலாநிதி டேவிற் வின்சன் பற்றிக்கின் சொர்க்கம் நூல் வெளியீட்டு விழா யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் நேற்று முன்தினம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜே.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது. நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.சத்தியா ரஞ்சித் நிகழ்த்தினார். நூல் ஆய்வுரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி கலாநிதி பா.தனபாலன் வழங்கினார்.

(படங்கள்:-ஈச்சமோட்டை செய்தியாளர்)

# உணவு ஒவ்வாமையால் மூன்று பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வாதுவை பகுதியிலுள்ள விருந்தகம் ஒன்றில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வில் உணவு ஒவ்வாமை காரணமாக இருவர் ஏற்கனவே உயிரிழந்த நிலையில் மேலும் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

உணவு ஒவ்வாமையின் காரணமாக பாதிக்கப்பட்டு நால்வர் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர். இந்நிலையிலேயே இவர்களுள் இருவர் ஏற்கனவே உயிரிழந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த இருவரில் 31 வயதுடைய ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். (இ-7)

# மாணவனின் மருத்துவ சிகிச்சைக்கு ஏழு இலட்சம் ரூபாய் நிதியுதவி



(கரணவாய்)

சிறுநீரகம் பாதிக்கப்பட்ட மாணவன் ஒருவனுக்கு சிகிச்சை மேற்கொள்வதற்காக நெல்லியடி வாணிபர் கழகத்தினரால் ஏழு இலட் சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

நெல்லியடி வாணிபர் கழக அங்கத்தவராக இருந்த ஜெகநாதன் என்பவரின் மகன் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ளார்.

அவருக்கு சிகிச்சை மேற்கொள்வதற்காக ஏழு இலட்சம் ரூபாய் நிதியினை வர்த்தகர் சங்கம் வழங்கியுள்ளது.

நெல்லியடி வாணிபர் கழகத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை நெல்லியடி நகரிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது.

இதில் குறித்த மாணவனின் தந்தையிடம் சிகிச்சைக்காக ஏழு இலட்சம் ரூபாய் நிதியினை வர்த்தகர் சங்கத் தலைவர் சி.சிவம், செயலாளர் சுரேரஞ்சன், பொருளாளர்அருட்செல்வன், உப தலைவர் எஸ். அகிலதாஸ் ஆகியோர் இணைந்து வழங்கினர். (இ-60)

# உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை சரிவர மேற்கொள்வது மிக முக்கியம்

## சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் சிறுவர்களின் நலனுக்காகக் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமக்குரிய கடமைகளைச் சரிவர மேற்கொள்வது மிக முக்கியம் என வடமாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர்ரிவிஸ்பரூபன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சிறுவர் உரிமைகள் பற்றிய மாகாண நடவடிக்கைகள் குழுவின் தீர்மானத்தின் படி வடக்கு மாகாணத்தில் சிறுவர்களின் நலனுக்காக கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் வகிபங்குகள் தொடர்பாக ஆராயப்படல் வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைவாக வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை மற்றும் பிரதேச செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்களுக்கான பயிற்சிப்பட்டறையும் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்டது.

இந்தப் பயிற்சிப்பட்டறையின் வளவாளராக சட்ட வரைஞர் திணைக்களத்தின் சிரேஷ்ட சட்டவரைஞராக கடமையாற்றும் செ.செல்வகுணபாலன் கலந்து கொண்டார். அன்றைய தினம் நன்னடத்தை பாதுகாவல் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக நியமனம் செய்யப்பட்ட நன்னடத்தை உத்தியோத்தர்கள் பாதிக்கப்பட்ட சிறுவர் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் மன்றின் கட்டளைக்கு அமைய இதர கடமைகளை ஆற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

இலங்கையில் சிறுவர் சமவாயத்தினை அமுல்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் சிறுவர் உரிமைகள் பேணப்படுவதை உறுதிப்படுத்தல் மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்தல் போன்ற கடமைகளை ஆற்றுபவராகவும் இருக்க வேண்டும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டத்திற்கு அமைவாக நியமனம் செய்யப்பட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேசிய ரீதியில் சிறுவர் தொடர்பான கொள்கைகள் மற்றும் சட்டங்களை ஆக்குவதற்கு ஆலோசனை வழங்குதல் போன்ற கடமைகளை ஆற்றுபவர்களாக இருக்க வேண்டும். அந்தவகையில் வடக்கு மாகாணத்தில் சிறுவர்களின் நலனுக்காக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மேற்குறித்த தீர்மானங்களை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# அரியகுட்டியின் சிலை திறப்பு



(யாழ்ப்பாணம்)

புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினருமான அமரர் சி.அரியகுட்டியின் உருவச்சிலை திரைநீக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை புத்தூரில் இடம்பெற்றது.

அமரரின் உருவச் சிலையினை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரியகுட்டியின் மகனும் மாகாண சபை உறுப்பினருமான பரஞ்சோதி உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-89)

# அமரர் அமிர்தலிங்கத்தின் பிறந்தநாளை முன்னிட்டு வடக்கு பாடசாலை மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் 91 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான பேச்சுப்போட்டி - 2018 நடத்தப்படவுள்ளது.

போட்டி நிபந்தனைகள்

தரம்- 10, 11 (5 நிமிடங்கள்)

✦ சுய நிர்ணய உரிமைக் கோட்பாடே அமரர் அமிர்தலிங்கத்தின் உயிர் மூச்சு

✦ அகிம்சையையே ஆயுதமாக்கிய செயல் வீரன் அமிர்தலிங்கம்

தரம்- 12, 13 (7 நிமிடங்கள்)

✦ குன்றா மிடுக்கோடு நின்று களமாடிய வீரன் அமரர் அமிர்தலிங்கம்

✦ தமிழ்த்தேசியத்தின்தன்னிகரில்லாத் தலைவர் அமரர் அமிர்தலிங்கம்.

➢ விரும்பிய தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து குறித்த நேரத்தினுள் பேசுதல் வேண்டும்.

➢ முன்கூட்டியே தயாரப்படுத்தி மனனம் செய்து சுயமாகப் பேச வேண்டும்.

➢ பாடசாலைச் சீருடையுடன் பங்கேற்க வேண்டும்.

➢ பங்குபற்ற விரும்புவோர் பாடசாலை அதிபர் ஊடாக 15.08.2018 முன் கிடைக்கக் கூடியதாக தபாலில் அனுப்பி வைக்கவும்.

➢ போட்டியில் மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். வடக்கு மாகாண பாடசாலையில் கல்வி கற்கும் அனைவரும் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றியீட்டும் முதல் 3 போட்டியாளர்களுக்கும் முதலாம் இடம் பெறுவோருக்கு தங்கப்பதக்கமும் ஏனையோருக்குப் பெறுதியான பரிசில்களும் வழங்கப்படும்.

➢ பேச்சுப் போட்டிக்கான விண்ணப்பங்களை உரிய படிவத்தில் தயாரித்து 15.08.2018 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

➢ 19.08.2018 ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் மேல் மாடியில் போட்டிகள் நடைபெறும். போட்டிக்கு வரும் போதும் விண்ணப்பங்களை நேரில் ஒப்படைத்து பங்குபற்ற முடியும்.

➢ விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை, க.கௌரிகாந்தன், நவாலியூர், மானிப்பாய், தொலைபேசி இல. 077 527 4300/ 077 617 1397 என அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளை செயலாளர் அறிவித்துள்ளார். (இ)


# கண்ணீர் அஞ்சலி

அமரர். திருமதி. அந்தோனி கட்டுக்காரன் திருச்செல்வம் சவிரியாச்சி (ராசம்)



எமது சக உத்தியோகத்தரான திருச்செல்வம்-காருண்ணியநாதன் (சிரேஷ்ட நன்னடத்தை அதிகாரி, வவுனியா மாவட்டம்) அவர்களின் அன்புத் தாயார் அமரர்.திருமதி. அந்தோனி கட்டுக்காரன் திருச்செல்வம் சவிரியாச்சி (ராசம்) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நன்னடத்தை உத்தியோகத்தர்கள் சங்கம், வடமாகாணம்.

(3443)





மன்னார் மாவட்டத்தின் நானாட்டன் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நறுவிலிக்குளம் கிராமத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அமைக்கப்பட்ட 102 ஆவது மாதிரிக் கிராமமான "லூர்து நகர்" கிராமம் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டு கையளிக்கப்பட்டது. தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது. வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச கலந்து கொண்டு "லூர்து நகர்" கிராமத்தை மக்களிடம் கையளித்தார். குறித்த கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 23 வீடுகளை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து திறந்து வைத்தனர். இதன் போது தெரிவு செய்யப்பட்ட ஆயிரத்து 93 பயனாளிகளுக்கு சுய தொழில் உபகரணங்கள், மற்றும் கடன் திட்டத்திற்காக தலா ஒரு இலட்சம் ரூபா பணம் கடன் அடிப்படையில் காசோலையாக வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்காக உழைக்கும் சிறந்த மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யுங்கள்

## பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

மக்களுக்காக உழைக்கும் நல்ல மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுப்பதாக மீள் குடியேற்ற புனர்வாழ்வு மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் கிராமத்தில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் யாவருக்கும் வீட்டுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 101 ஆவது மாதிரி கிராமத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் பிரதியமைச்சர் மஸ்தான் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வசதியாக இருந்த பல குடும்பங்கள் இன்று தமது அன்றாட வாழ்வை கொண்டு செல்ல முடியாத நிலையில் இருக்கும் பொழுது அமைச்சர் சஜித் பிரேமதாச நாடு முழுவதுமான மிக நீண்டதொரு செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக எமது மக்களின் தேவைகளை அறிந்து மிக முக்கியமான தேவைகளில் ஒன்றாக இருந்த வீடுகளை வழங்க முன் வந்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் ஊடாக 2025 ஆம் ஆண்டில் (யாவர்க்கும் வீடு) எனும் திட்டத்தின் கீழ் பல வருடங்களாக தமக்கான சொந்த வீட்டை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்த மக்களுக்கு வீடுகளை வழ்ங்கி அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் நல்லாட்சி அரசாங்கத்தின் பாரியதொரு செயற்றிட்டத்தை அமைச்சர் சஜித் பிரேமதாச மிக நேர்த்தியான முறையிலும் நேர்மையான முறையிலும் செய்து வருகின்றார்.

அந்த வகையிலேயேதான் இன்றைய நாளில் முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் 101 ஆவது மாதிரிக் கிராமம் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படுகின்றது.

வழமையாக வீட்டுத் திட்டம் என்றால் வீட்டுக்கான முழுப் பணத் தொகையையும் வழங்கி தமக்கான வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள பணிக்கப்படும்.

அவ்வாறான சில செயற்றிட்டங்கள் இன்னும் பூரணப்படுத்தப்படாத நிலையில் இருப்பதை நாம் காண்கின்றோம்.

முப்பது வருடங்களாக இடம் பெற்ற கொடூர யுத்தத்தில் இந்த கிராமம் முற்றாக அழிந்த நிலையில் காணப்பட்டது. இதனை அடுத்து அமரர் ரணசிங்க பிரேமதாசவின் புதல்வரும் தற்போதைய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச கடந்த 2016 ஆம் ஆண்டு டிசெம்ப்ர் மாதமளவில் இப்பகுதிக்கு வருகை தந்து இங்குள்ள மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இந்த வீட்டுத் திட்டம் இன்று மக்களுக்கு வழங்கப்படுகின்றது.

இந்த வீட்டுத் திட்டம் மாத்திரம் அல்லாது முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மேலும் சில வீட்டுத் திட்டங்களை வழங்க அமைச்சரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்ட பொழுது அதனை அவர் ஏற்று நமக்கு மேலும் சில திட்டங்களை தர முன் வந்திருக்கின்றார்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் மீள்குடியேற்ற புனர்வாழ்வு மற்றும் வடக்கு மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவராக செல்வம் அடைக்கலநாதன்,பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா,சிவமோகன் , முல்லை அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அரச உயரதிகாரிகள், வீட்டுத் திட்ட பயனாளிகள், மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2)

# முல்லையில் கடற்றொழிலாளர்களின் போராட்டம் நான்காவது நாளாகவும் தொடர்கின்றது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கையை கட்டுப்படுத்த கோரி கடற்றொழிலாளர்கள் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் முன்பாக கொட்டில் அமைத்து போராடி வருகின்றார்கள்.


நேற்றுடன் நான்காவது நாளாக போராட்டம் தொடர்கின்றது.

போராட்டம் நடத்திவரும் கடற்றொழிலாளர்களை மதகுருமார்கள் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்கள்.

நேற்றைய போராட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், வை. கெங்காதரன், ம.தெம்மைப்பிள்ளை உள்ளிட்டவர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் தொடர்ச்சியாக போராட்டம்மேற்கொண்டுவரும்கடற்றொழிலாளர்களுக்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்தனர். (2-281)




# கார்-மோட்டார் சைக்கிள் விபத்து; இருவர் காயம்



(குருமன்காடு)

வவுனியா, வைரவப்புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயத்திற்கு அருகே இடம்பெற்ற கார் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது. இவ்விபத்து குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரிலிருந்து குருமன்காடு நோக்கி வைரவப் புளியங்குளம் வீதியூடாக பயணித்த காரும் குருமன்காட்டிலிருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்ககுள்ளானது. கார் முன்னே சென்ற வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட போதே விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் வவ்னியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (2-250)

# வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைய வவுனியா வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டன

(வவுனியா)

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நேற்று முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை வழங்குவதற்கு வவுனியா வர்த்தக சங்கத்தினரால் வியாபார நிலையங்களுக்கு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.




இதற்கமைவாக நேற்றைய தினம் வவுனியா நகரிலுள்ள 95 வீதமான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு வர்த்தக சங்கத்தின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்தனர்.

மூடப்படாத வர்த்தக நிலையங்களுக்கு வர்த்தக சங்க உறுப்பினர்கள் விஜயம் மேற்கொண்டு வர்த்தக நிலையத்தை மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இந்நிலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் உதவித் தொழில் ஆணையாளர் தலைமையில் வர்த்தக நிலையங்களுக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட குழுவினர் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படுகின்றதா? என பரிசோதனைகளை மேற்கொண்டனர். (2)

# கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

எதிர்வரும் 12 ஆம் திகதி கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 4 ஆம் திகதியும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்ந்தவண்ணம்இருந்து இந்தத்தொழில் நடவடிக்கைக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் மூன்றாவதுநாளாகவும்போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்நிலையில் போராட்டம் நடத்தும் கடற்றொழிலாளர்களுடன் இணைந்து வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் உறுதுணையாகச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில் இந்தக் கருத்தை நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடற்றொழில் மக்களின் பிரதிநிதிகளால் பொலிஸ் நிலையத்திற்கு சென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடலில் நேற்று முன்தினம்சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்றொழில் படகு ஒன்றை முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் மறித்து கரைக்குச் கொண்டுவந்துள்ளார்கள்.

இவர்கள் திருகோணமலை விஜிதபுரம் என்ற பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.

ஒளிபாய்ச்சி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட படகும் மூன்று நபர்களும் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களால் கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனை பொலிஸாருக்கு அறிவிப்பதற்காக அமைப்புக்களின் பிரதிநிதிகள் சென்றுள்ளார்கள்.அங்கு பொலிஸார் இல்லாத காரணத்தால் அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்த போது யாரைக் கேட்டு நீங்கள் கைதுசெய்துள்ளீர்கள், பிடித்தீர்கள் என்ற தகவல்தான் தகவல் கொடுத்தவர்களுக்கு பதிலாக கிடைத்துள்ளது.

கொக்குளாய் தொடக்கம் பேப்பாரப்பிட்டி வரையான 74 கிலோமீற்றர் தூரம் உள்ள மீனவ மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக போராடிக் கொண்டிருக்கும் நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சட்டவிரோத தொழில்களை செய்பவர்களை பிடிக்கின்றார்கள் இல்லை. முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் பிடித்துக்கொண்டுவந்தாலும் அதனை ஏற்றுக்கொள்கின்றார்களில்லை. இந்நிலையில் தான் இன்று முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின்நிலைமை காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். (2-281)




## சீனியில் யூரியா கலப்பு

# சதொச பணியாளர்கள் இருவர் பணி நீக்கம்

(குருமன்காடு)

வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்ட சீனியில் யூரியா கலக்கப்பட்டுள்ள சம்பவத்தினையடுத்து சதொச தலைமை அலுவலகத்தினால் வவுனியா சதொச விற்பனை நிலையத்தின் முகாமையாளர் மற்றும் யூரியாவை நிலையத்திற்குள் எடுத்து வந்த பணியாளர் ஆகிய இருவரையும் பணி நீக்கம் செய்துள்ளதாக வவுனியா சதொச விற்பனை நிலையத் தகவல் தெரிவிக்கின்றன.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா சதொச விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்பட்ட சீனியில் யூரியா கலந்துள்ளதாக சதொசவில் பணியாற்றும் பணியாளர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை மேற்கொண்டனர். இதையடுத்து பொலிஸார், சுகாதாரப் பரிசோதகர்களின் கவனத்திற்கு கொண்டு வந்த நிலையில் அங்கு சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட விசாரணைகளின் போது குறித்த நிலையத்தில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் தனது தேவைக்காக யூரியாவைக் கொள்வனவு செய்து வைத்திருந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இதையடுத்து பிறிதொரு பணியாளர் அதனை சீனி என நினைத்து விற்பனை செய்துள்ளதுடன், வேறு சீனியுடன் விற்பனைக்காக கலந்து வைத்துள்ளார். இதன் பின்னர் சதொச பணியாளர்கள் பொலிஸ் நிலையத்தில் நடந்தவற்றை தெரிவித்துள்ளனர்.

எனினும் சம்பவ தினத்தன்று சதொச விற்பனை நிலையத்தால் 114கிலோ கிராம் சீனி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் யூரியாவைக் கொண்டு வந்து வைத்தவர் மற்றும் முகாமையாளர் ஆகிய இருவரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (2-250)

# சீனிப்பாணியை தேன் எனக்கூறி விற்பனை செய்த நபர் அகப்பட்டார்

(குருமன்காடு)

வவுனியாவில் நீண்ட காலமாக வியாபார நிலையங்களுக்கு தேன் எனத் தெரிவித்து சீனிப்பாணியை விற்பனை செய்து வந்த நெளுக்குளம் பகுதியிலுள்ள நபர் ஒருவரை 10 போத்தல்கள் சீனிப்பாணியுடன் கைது செய்துள்ளதாகவும் அவரிடமிருந்து சட்டவிரோதமாக தேன் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் வவுனியா மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் க.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மரக் காரம் பளையிலுள்ள வியாபார நிலையம் ஒன்றிற்கு தேன் எனத் தெரிவித்து சீனிப்பாணி நீண்ட நாட்களாக விற்பனை செய்து வரப்பட்டுள்ளது.

இதையடுத்து வியாபார நிலைய உரிமையாளர் வவுனியா மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகருக்கு தகவல் வழங்கிய அடிப்படையில், நேற்றுக் காலை விற்பனை செய்வதற்கு எடுத்துவரப்பட்ட 10 போத்தல்கள் சீனிப்பாணியுடன் நெளுக்குளம் ஊர்மிளா கோட்டத்திலுள்ள நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது நெளுக்குளம் ஊர்மிளா கோட்டத்திலிருந்து சீனிப்பாணி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்களையும் மீட்டுள்ளனர்.

மேலும் ஒரு வீட்டில் சோதனை மேற்கொள்ளச் சென்றபோது அவ்வீட்டில் எவரும் இருக்கவில்லை.

இவ்வாறு குறித்த நபரிடமிருந்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் சந்தேக நபர் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் மேற்பார்வை சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இனந் தெரியாதவர்களிடம் தேன் பெற்றுக்கொள்ள வேண்டாம். தேன் போத்தல் விற்பனை செய்ய வருபவர்களின் போத்தலில் சுற்றுத்துண்டு இருந்தால் மட்டும் பெற்றுக் கொள்ளவும்.

இவ்வாறு சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்யவேண்டாம் என்று வியாபார நிலைய உரிமையாளர்களிடம் கேட்டுக் கொள்வதாக மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# உணர்ச்சி மேலீட்டால் வவுனியாவில் கண்ணீர் விட்ட பொலிஸ்மா அதிபர்



(குருமன்காடு)

வவுனியா மாவட்ட சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தென்னஞ்சோலை திட்டத்தின் போது பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உணர்ச்சி மேலீட்டினால் கண்ணீர் விட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா- மன்னார் மாவட்டங்களின் பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தில் 100 தென்னங்கன்றுகள் நடும் தென்னஞ்சோலை திட்ட நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர கலந்து கொண்டு தென்னஞ்சோலை திட்டத்தை ஆரம்பித்து வைத்ததுடன் பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாட்டிலும் கலந்து கொண்டார்.

இதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், பொலிஸாரின் செயற்பாடுகளுக்கு வவுனியா, மன்னார் மக்கள் வழங்கும் ஒத்துழைப்பு குறித்தும் சமுதாய பொலிஸ் குழுவின் செயற்பாடு மற்றும் வவுனியா - மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் வழிநடத்தல் குறித்தும் பெருமிதம் கொண்ட பொலிஸ்மா அதிபர் உணர்ச்சி மேலீட்டினால் ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

இந்நிகழ்வில் பொலிஸ் அதிகாரிகள், வவுனியா நகர சபைத் தலைவர் இ.கௌதமன், வவுனியா வர்த்தகர் சங்கத் தலைவர் சுஜன், வர்த்தகர் சங்க உறுப்பினர்கள், மதத்தலைவர்கள், சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள், மாணவர்கள், நரசிங்கர் ஆலய பரிபாலன சபையினர் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## வவுனியா வர்த்தகர் சங்கத்துடன் நான்கு சங்கங்கள் இணைந்து செயற்படுவதற்கு முடிவு



(பனிக்கன்குளம்)

வவுனியா வர்த்தகர் சங்கத்துடன் மாவட்டத்தில் இயங்கிவரும் நான்கு முக்கிய சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா வர்த்தகர் சங்கத்தின் அழைப்பின் பேரில் மாவட்டத்திலுள்ள அமைப்புக்களான தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம், சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம், உள்ளூர் விளைபொருட்கள் விற்பனையாளர்கள் சங்கம் ஆகிய நான்கு சங்கங்களின் தலைவர்களும் ஒன்றிணைந்து கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். இதன்போது மாவட்டத்தில் இடம்பெறும் நிகழ்வுகளில் அனைத்துச் சங்கங்களின் ஆதரவைப் பெற்று இனிவரும் காலங்களில் சுமுகமாகச் செயற்படுவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளாக இணைந்து பணியாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்படவில்லை. தற்போது குறித்த ஐந்து சங்கங்களும் ஒன்றிணைந்து ஓரணியில் மக்களின் நலனுக்காக செயற்படுவதற்கு ஐந்து சங்கங்களின் தலைவர்களும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு முன்வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (2-281)

# பாடசாலை சிறுமிகள் கடத்தல் சம்பவம் தொடர்பில் இளைஞன் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் கடத்தப்பட்ட இரண்டு பாடசாலை சிறுமிகள் அலரி விதை உட்கொண்ட நிலையில் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை வவுனியா நகரப்பகுதி ஒன்றைச் சேர்ந்த 15 மற்றும் 16 வயதுகளைக் கொண்ட மாணவிகளைக் பூந்தோட்டம் பகுதியில் வைத்து கடத்தப்பட்டிருந்தது.

கடத் தப்பட்ட இருவரையும் சாந்த சோலை வீதியில் உள்ள கைவிடப்பட்ட வீடு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவர்கள், இருவரும் அங்கிருந்து அன்றைய தினம் மாலை தப்பித்துதுடன், அலரி விதை உட்கொண்டிருந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் இச்சம்பவம் தொடர்பில் வவுனியா, சிறிராமபுரம் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)





தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளிலுள்ள தென்மராட்சி அபிவிருத்திக் கழகங்கள் இணைந்து நடத்திய தென்மராட்சி விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது. தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன்,கௌரவ விருந்தினராக பிரான்ஸ் நாட்டின் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் செ.முகிந்தராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வில் புலம்பெயர் உறவுகள், நகரசபை உறுப்பினர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்: சுபேசன்)

# நாட்டில் சகல குற்றங்களையும் அரசே மேற்கொள்கின்றது

## பசில் பரபரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாடு என்ற வகையில் மேற்கொள்ளக்கூடிய சகல குற்றங்களையும் தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "அரசாங்கத்திற்கு எதிரான தேசிய போராட்டம்" என்ற தொனிப்பொருளிலான பொதுமக்கள் தெளிவூட்டல் கருத்தரங்கு ஒன்று கலவான பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன் போதே பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

நாடு என்ற வகையில் மேற்கொள்ளக்கூடிய சகல குற்றங்களையும் தற்போதைய அரசாங்கம் முன்னின்று மேற்கொண்டு வருகிறது எனவும் நாட்டின் வளங்கள் தொடர்ச்சியாக விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் பசில் ராஜபக்ஷ குற்றம்சாட்டினார். (இ-7)



# ஜனாதிபதி வேட்பாளராக சிராந்தி நாமலுக்கு நிமால் ஆலோசனை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் மூத்த மகனும் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு தனிப்பட்ட விடயமொன்றுக்காக தொலைபேசி அழைப்பொன்றை எடுத்துள்ளார்.

இதன் போது குறித்த விடயம் சம்பந்தமான பேச்சுக்கள் நிறைவடைந்ததையடுத்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சி சார்பான வேட்பாளர் தொடர்பாக பேச்சுக்கள் நிகழ்ந்துள்ளன.




அத்தருணத்தில் அமைச்சர் நிமால், கோத்தபாய ராஜபக்ஷவினை வேட்பாளராக களமிறக்கினால் அனைவரின் ஆதரவினையும் பெறுவது கடினமாக இருப்பதோடு மத்தியதர மற்றும் சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெறுவதும் இலகுவாக இருக்காது என்று கூறியதோடு பசில் ராஜபக்ஷவை களமிறக்கினால் ஏனையவர்கள் எதனையும் செய்ய முடியாது. அனைத்தையும் அவரே செய்து முடித்துவிடுவார்.

எனவே ஜனாதிபதி வேட்பாளருக்கு பொருத்தமானவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் மனைவி சிராந்தியே. அவரை களமிறக்கினால் அனைவரினது ஆதரவையும் பெற முடியும் என்று எடுத்துக் கூறியுள்ளார்.

எனினும்நாமல் ராஜபக்ஷ இந்த விடயம் சம்பந்தமாக எந்தவிதமான பதிலையும் கூறவில்லை. அது தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன் என்று மட்டும் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# இலங்கையில் தொடர்ந்தும் கரை ஒதுங்கும் திமிங்கலங்கள்



(கொழும்பு)

இலங்கைக் கடற்கரைகளில் உயிரிழந்த திமிங்கலங்களின் சடலங்கள் ஒதுங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் புத்தளம் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் 4 திமிங்கலங்களின் சடலங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட வனவிலங்கு உதவி இயக்குநர் சந்திரரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதி கந்தகுளிய இச்சன்காடு கடலில்ஒருதிமிங்கலத்தின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 16ஆம் திகதி மீண்டும் கந்தகுளிய குடாவ கடற்கரையில் மற்றுமொரு திமிங்கலத்தின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

17ஆம் திகதி மூன்றாவது சடலம் மீட்கப்பட்ட நிலையில், 4ஆவது சடலம் நேற்று முன்தினம் புத்தளம் நிர்மலபுர கடலில் கரை ஒதுங்கியுள்ளது.

இந்த நான்கு சந்தர்ப்பத்திலும், புத்தளம் கடற்கரையில் ஒதுங்கிய திமிங்கலங்கள் பில்டர் பிட் வகையை சேர்ந்ததாகும். அவற்றின் உடலை சோதனையிட்ட போது அது 30 - 35 அடி நீளமானதென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கரை ஒதுங்கிய திமிங்கலங்களின் சடலம் கரையில் இருந்து நீக் கப்பட்டுள்ளது. எனினும் இவற்றின் தலைகள் மீட்கப்படவில்லை. அத்துடன் இவற்றின் உடலின் சில இடங் களில் வெட்டுக்காயங்களைக் காண முடிந்ததாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# ராஜபக்ஷ அணிக்குள் நெருக்கடி

## விக்கிரமபாகு சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பாசிசவாத ராஜபக்ஷவினர் மத்தியில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ள விதத்தை காண முடிந்துள்ளதாக நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் விக்கிரமபாகு இதனை தெரிவித்தார்.

தேர்தல் ஒத்திவைக்கப்படுவது குறித்து மகிந்த ராஜபக்ஷ ஒரு கருத்தை முன்வைக்கும் போது, தினேஷ் குணவர்த்தன வேறு விதமான கருத்தை முன்வைக்கின்றார். இதன் மூலம் இவர்கள் ஒரு அணியாக எந்தளவுக்கு இணக்கத்துடன் இருக்கின்றனர் என்பது புலப்படுகிறது.

இதனடிப்படையில் இனவாதத்தை அடிப்படையாக கொண்ட ராஜபக்ஷ முகாம் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகிறது.

ராஜபக்ஷ சகோதரர்கள் இடையில் காணப்படும் மோதல்கள், தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் கருத்துக்கள் மூலம் வெளிப்படும் பரஸ்பர முரண்பாடான தன்மை என்பன அவர்களுக்குள் பிளவுகள் இருப்பதை காட்டுவதாகவும் விக்கிரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# வனப்பகுதிகளில் தீ! 52 சம்பவங்கள் பதிவு



(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் வனப்பகுதிகளில் தீவைக்கப்பட்ட 52 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக வனப் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவற்றுள் அதிகளவிலான சம்பவங்கள் பதுளை மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன், வலபன்னை ஆகிய பிரதேசங்களிலும் அநுராதபுரம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களிலும் இவ்வாறு வனப்பகுதிகளுக்கு தீ வைப்புச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. (இ-7)




பேராசிரியர் ஜோன் மனோகரன் கெனடி நினைவாக காரைநகர் பிரதேசத்திலுள்ள 142 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது

# நீங்கள் அனைவரும் செய்தியாளராகலாம்!

செய்தியாளர்கள் என்ற எல்லை கடந்து பொதுமக்கள், நிறுவனத் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் என சகலரும் செய்திகளை, தகவல்களை வழங்குகின்ற வாய்ப்பை வலம்புரி நாளிதழ் உங்கள் அனைவருக்கும் மகிழ்வோடு வழங்குகிறது.

**எந்த வேளையிலும் நீங்கள் அறிந்த செய்திகள், தகவல்கள், சம்பவங்கள், நிகழ்வுகள் அவற்றின் புகைப்படங்கள் என்பவற்றை 24 மணி நேரமும் வலம்புரி நாளிதழுக்கு வழங்குவதற்கான விசேட ஏற்பாட்டை உங்கள் வலம்புரி செய்து தருகிறது. இவ்வாறு நீங்கள் தகவல்களை, செய்திகளை வழங்குவதன் மூலம்**

- உங்கள் வேலைத்திட்டங்கள், செயற்பாடுகள்
- உங்கள் நிறுவனங்கள் வழங்கும் சேவைகள்
- உங்கள் நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புக்கள் புலமைப்பரிசில் திட்டங்கள்
- உயர் கல்வி நிறுவனங்களில் புதிதாக அறிமுகப் படுத்தப்படும் கற்கை நெறிகள், பயிற்சிகள்
- வங்கிகளில் மக்கள் பெறக்கூடிய குறைந்த வட்டிக் கடன்கள், இலகு கடன்கள்
- வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு உதவுகின்ற நிறுவனங்களின் உதவித்திட்டங்களைப் பெறுகின்ற வழிமுறைகள்

என்பவற்றை பொதுமக்கள் அறியவும் அதன்மூலம் நன்மை பெறவும் முடியும்.
இவ்வாறு தகவல்களை வழங்கி பொதுமக்களுக்கு உதவுவதன் மூலம் நீங்கள் பேருதவி புரிகின்றீர்கள்.

இதற்கு மேலாக...

- உங்கள் பிரதேசங்களில் நடக்கின்ற ஆக்கிரமிப்புக்கள், திட்டமிட்ட குடியேற்றங்கள், நில அபகரிப்புக்கள்
- நியாயபூர்வமாகக் கிடைக்க வேண்டிய விடயங்கள் இழுத்தடிக்கப்படும் சம்பவங்கள்
- சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள்
- புனரமைக்கப்படாத வீதிகள், பாலங்கள், போக்குவரத்துச் சீரின்மைகள் போன்ற பல விடயங்களையும் வெளிப்படுத்தி அவற்றைச் செப்பனிட முடியும்.

இதற்காகவே நீங்கள் அனைவரும் செய்திகளை வழங்குகின்ற சந்தர்ப்பத்தை வலம்புரி ஏற்பாடு செய்துள்ளது.
தேவையான இடங்களில் இரகசியம் நூறுவீதம் பாதுகாக்கப்படும்.

**நீங்கள் அறிந்த செய்திகளை, தகவல்களை, சம்பவங்களை, புகைப்படங்களை அனுப்புவதற்கு**

**தொலைபேசி:-021 567 1541 / 070 220 2206**
**வைபர்:- 076 636 3378**
**தொலைநகல்:- 021 222 7829**
**E-mail:- valampuriijaffna@gmail.com**

தபால் முகவரி : பிரதம ஆசிரியர் , வலம்புரி பத்திரிகை, இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்.

## வாகன விபத்தில் சிக்கி சிறுமி உட்பட மூவர் பலி!

(கொழும்பு)

மொனராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புக்கன பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் எட்டு வயது சிறுமி உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளதாக மொனராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை - வெல்லவாய வீதியில் லொறியொன்றும் ஆட்டோவும் மோதியதனாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அத்துடன் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மொனராகலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)







கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்து சுபஹ புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களான பெ.டினுசன் மற்றும் த.கஜிதன் ஆகியோர் அலரிமாளிகையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திடமிருந்து புலமைப்பரிசிலைப் பெற்றுக் கொள்வதைப் படங்களில் காணலாம்.

# கருணையில்லாத, மூளை குழம்பிய தலைவர்களின் ஆட்சி

## சி.பீ.ரத்நாயக்க சீற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பெயரிலுள்ள கருணை என்பது பொய்யானது எனவும், அவரிடம் பொறாமை, பழிவாங்கும் எண்ணம் என்பனவே காணப்படுவதாகவும் பிரதமரின் மூளை குழப்பமடைந்துள்ளதால், பிழையான தீர்மானங்களை எடுத்து வருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சி.பீ.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொத்மலை, பூண்டுலோயாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் ரணிலின் மூளை குழப்பமடைந்துள்ளது. இதனாலேயே நாட்டுக்குப் பொருத்தமில்லாத தீர்மானங்களை அவர் முன்னெடுத்து வருகின்றார்.

அவர் எல்லா வகையான காட்டிக் கொடுப்புக்களையும் தற்போது அரங்கேற்றி வருகின்றார்.



அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்றுள்ளது. மத்தள விமான நிலையத்தை விற்க நடவடிக்கை முன்னெடுத்துள்ளது. தற்போது ஒலுவில் துறைமுகத்தை விற்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

100 நீதிமன்றங்களை அமைத்து சிறைகளில் அடைத்தாலும் கூட்டு எதிர்க் கட்சி முன்னெடுக்கும் இந்தப் போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை. தற்போது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஊதியத்தை அதிகரிக்க வேண்டிய எந்தவொரு தேவையும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதியின் பெயரில் மைத்திரி என்ற இரக்க குணம் காணப்பட்டாலும் அவரிடம் அவ்வகையான குணம் இல்லை. மாறாக பொறாமை, பழிவாங்கும் எண்ணம் போன்றவையே மேலோங்கிக் காணப்படுகின்றது எனவும் சி.பீ. ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கருணாநிதி ஆபத்தான நிலையைத் தாண்டிவிட்டார்

## துரைமுருகன் நெகிழ்ச்சி



(சென்னை)

காவேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஆபத்தான கட்டத்தை கடந்துவிட்டாரென தி.மு.க. முதன்மை செயலாளர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை கருணாநிதியின் உடல்நிலை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த வாரங்களுடன் ஒப்பிடுகையில், கருணாநிதியின் உடல்நிலையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் நாம் கூறுவதை அவரால் கேட்க முடிகிறது. இந்தவகையில் அவர் ஆபத்தான கட்டத்தை தற்போது கடந்து விட்டார்.

இதனால் இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் நிச்சயம் வீடு திரும்புவார் என துரை முருகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கருணாநிதியின் உடல் நலம் குறித்து விசாரிப்பதற்கு அரசியல் கட்சித் தலைவர்கள், சினிமாத்துறையைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஏனைய கலைஞர்கள் தொடர்ந்து காவேரி வைத்தியசாலைக்கு சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## பேருந்து விபத்தில் இரு சிறுவர்கள் பலி

# பங்களாதேஷில் 5 நாட்களாக மாணவர்கள் போராட்டம்

## 300 வாகனங்கள் சேதம்



(டாக்கா)

பங்களாதேஷில் அதிவேகமாக வந்த அரசு பேருந்து மோதியதில் இரண்டு சிறுவர்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து, கடந்த ஐந்து நாட்களாக மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்

பங்களாதேஷில் போக்குவரத்து துறையில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாகவும், அபாயகரமான வீதிகளால் தொடர்ந்து விபத்து நடப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த சூழ்நிலையில், டாக்காவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட விபத்து மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

அதிவேகமாக சென்ற பயணிகள் பேருந்து, வீதியோரம் நின்றுகொண்டிருந்த ஒரு சிறுவன் மற்றும் சிறுமி மீது மோதியதில் அவர்கள் இருவரும் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து கடும் ஆத்திரமடைந்த பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் ஆங்காங்கே வீதிமறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டனர்.

குறிப்பாக மாணவர்கள் ஆக்ரோஷத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சில பகுதிகளில் வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. பொலிஸாருடன் மோதலும் நடந்தது. இந்த போராட்டம் நாடு முழுவதும் பரவியது.

கடந்த 2 ஆம் திகதி ஐந்தாவது நாளாக மாணவர்கள் போராட்டம் நடத்தினர். டாக்காவில் மழையையும்பொருட்படுத்தாமல் ஆயிரக்கணக்கான மாணவர்கள் திரண்டதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மாணவர்கள் போராட்டம் காரணமாக நாடு முழுவதும் பாடசாலைகளுக்கு கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை விடுமுறை விடப்பட்டது. போராட்டம் தொடங்கிய நாளில் இருந்து இது வரை 300க்கும் மேற்பட்ட வாகனங்கள் அடித்து நொறுக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

அரசு போக்குவரத்து கழகத்தில் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு மேற்கொள்ளப்படும் என்றும், போராட்டக்காரர்கள் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் உள்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த ஆண்டு மட்டும் வீதி விபத்துக்களில் 4200 இற்கும் மேற்பட்ட பாதசாரிகள் உயிரிழந்ததாகவும், இது முந்தைய ஆண்டைவிட 25 சதவீதம் அதிகம் என்றும் புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. (7)

# சவுதிக் கூட்டுப்படை

# பலி எண்ணிக்கை 60



(சனா)

ஏமன் நாட்டில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி கூட்டுப்படைகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏமன் நாட்டின் வட மேற்கு பகுதிகள் மற்றும் தலைநகர் சனா உட்பட நாட்டின் பெரும் பகுதிகளை ஹூதி கிளர்ச்சியாளர்களும், அதனுடைய கூட்டணி படையினரும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இதன் காரணமாக கடந்த 2014 ஆம் ஆண்டு ஏமன் ஜனாதிபதி மன்சூர் ஹாதி வெளிநாடு தப்பிச் சென்றுவிட்டார்.

ஏமனில் மீண்டும் மன்சூர் ஹாதி அரசை அமைக்கும் நோக்கில் சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சன்னி இஸ்லாமியர்கள் கூட்டணி மேற்கத்தேய நாடுகளின் ஆதரவுடன் கடந்த 3 ஆண்டுகளாக ஈரான் ஆதரவுடன் இயங்கும் ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக போரிட்டு வருகிறது.

# வெனிசுவெலா ஜனாதிபதி மதுரோவை குறிவைத்து வெடிகுண்டுத் தாக்குதல்

## ஏழு பேர் படுகாயம்

(கராகஸ்)

வெனிசுவெலா நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கலந்துகொண்டிருந்த நிகழ்வில் ஆளில்லா விமானத்தின் மூலம் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் ஜனாதிபதி நிக்கோலஸிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும், 7 பாதுகாப்பு வீரர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

வெனிசுவெலா இராணுவத்தின் 81ஆவது ஆண்டினை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்த நாட்டு ஜனாதிபதி மதுரோ உரையாற்றிக் கொண்டிருந்தபோதே, இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த நாட்டின் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். குண்டுதுளைக்காத அங்கிகளைக் கொண்டு போர்த்தி, ஜனாதிபதியை இராணுவத்தினர் காப்பாற்றியுள்ளனர்.

அத்தோடு, இத்தாக்குதலின் பின்னணியில் வலதுசாரிக்கு ஆதரவான கொலம்பியாவும் அதன் ஜனாதிபதியும் செயற்பட்டுள்ளனர் என வெனிசுவெலா ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனினும், அதனை கொலம்பியா மறுத்துள்ளது. இதேவேளை, தாக்குதலில் காயமடைந்த வீரர்களை ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்க தரப்பினர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளதோடு, தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (7)

## பேருந் குழந்

(இஸ்லாமாபா

பாகிஸ்தானி விபத்துக்குள்ளா உயிரிழந்துள்ள நேற்று பேருந்து வந்தபொழுது,



இதனையடுத் மற்றும் காயம விபத்தில் 20 பே 35 பயணிகள் க

# வடகொரியா மீது ஐ.நா பொருளாதார தடைகளை ர

## அமெரிக்கா கு



(வோஷிங்டன்)

வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள பொருளாதார தடைகளை ரஷ்யா மீறிவிட்டதாக அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

உலக நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி வடகொரியா பலமுறை அணுவாயுதங்களையும், கண்டம்விட்டு கண்டம் பாயும் பல ஏவுகணைகளையும் பரிசோதித்தது. மேலும், ஐதரசன் குண்டு பரிசோதனையிலும் முழுமையான வெற்றி பெற்றதாகவும் அந்நாடு தெரிவித்திருந்தது.

இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வடகொரியாவுக்கு எதிராக கடும் பொருளாதார தடைகள் அடங்கிய தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தாக்கல் செய்து, ரஷ்யா, சீனா உள்ளிட்ட அனைத்து நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றியது.

இந்நிலையில், வடகொரியாவை சேர்ந்த 10 ஆயிரம் பேருக்கு ரஷ்யாவில் பணி புரிய அந்நாடு அனுமதி வழங்கியதன் மூலம் வடகொரியா மீது ஐ.நா. சபை விதித்த பொருளாதார தடைகளை ரஷ்யா மீறிவிட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து ஐ.நாவிற்கான அமெரிக்காவின் நிரந்தர உறுப்பினர் நிக்கி ஹாலே கூறுகையில், கடந்த செப்டெம்பர் மாதம் முதல் ரஷ்யாவில் பணி புரிவதற்காக வடகொரியாவை சேர்ந்த 10 ஆயிரம் பேருக்கு புதிய பணி ஆணையை ரஷ்யா வழங்கியுள்ளது.

இதன்மூலம் ரஷ்யாவில் ஆண்டு வருமானமாக கிடைக்கும் 150 முதல் 300 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை தொழிலாளர்கள் வடகொரியா

# ட தாக்குதலில்

# 0 ஆக உயர்வு



ஏமனின் முக்கிய பகுதியான ஹுதேய்டாவில் உள்ள வைத்தியசாலை, மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன்கள் சந்தையில் சவுதி கூட்டணி படைகள் கடந்த 2 ஆம் திகதி தாக்குதலில் ஈடுபட்டன.


இதில், பொது மக்கள் 30 பேர் உயிரிழந்ததாக முதல் கட்ட தகவல் வெளியாகியது.

இந்நிலையில், 'இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளது. (7)

# நந்து-லொறி கோர விபத்து! ந்தைகள் உட்பட 20 பேர் பலி!

ாமாபாத்)

தானின் வடமேற்கு பகுதியில் நேற்று பேருந்து மற்றும் லொறி மோதி நள்ளானதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 20 பேர் பரிதாபமாக துள்ளனர். வடமேற்கு பாகிஸ்தானில் புனெர் நகரில் இருந்து கராச்சி நோக்கி ருந்து கைபர் பக்துன்குவாவில் கோஹத் மாவட்டத்தில் சமரி பகுதி அருகே ழுது, லொறி ஒன்றின் மீது மோதி விபத்திற்குள்ளானது.



னயடுத்து மீட்புப் பணியாளர்கள் உடனடியாக அங்கு சென்று உடல்கள் ாயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். இந்த 20 பேர் பலியாகினர். அவர்களில் 2 பேர் பெண்கள். 2 பேர் சிறுவர்கள். கள் காயமடைந்துமுள்ளனர். (7)

# நா. சபை விதித்த ரஷ்யா மீறியுள்ளது

## குற்றச்சாட்டு



விற்கு அனுப்பி வைக்கின்றனர்.

அணு ஆயுத சோதனைகளை கைவிடுவதற்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள தடைகளில் ஒன்றான வடகொரியா பணியாளர்களை எந்த நாடும் வேலைக்கு வைத்துக் கொள்ளக் கூடாது எனும் தடையை ரஷ்யாவின் இந்த செயல் மீறிவிட்டது என ஹாலே குற்றம்சாட்டினார்.

ஆனால், இதற்கு மறுப்பு தெரிவித்துள்ள ரஷ்யா, வடகொரியா மீது பொருளாதார தடைகள் விதிப்பதற்கு முன்னதாக கையெழுத்தான ஒப்பந்தங்களின் அடிப்படையில் இப்போது பணி வழங்கப்படுகிறது.

அதன் அடிப்படையில், 3 ஆயிரத்து 500 வடகொரிய தொழிலாளர்களுக்கு பழைய ஒப்பந்தப்படி தற்போது வேலை வழங்கப்படுகிறது.

அவர்கள் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு வரை ரஷ்யாவில் தங்கி பணிபுரிய முடியும் என ரஷ்யா தெரிவித்துள்ளது. (7)


# ஹெலிகொப்டர் மோதல் இருபது பேர் உயிரிழப்பு

(மொஸ்கோ)

ரஷ்ய நாட்டை சேர்ந்த இரு ஹெலிகொப்டர் சைபீரியாவில் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதில் ஒரு ஹெலிகொப்டர் தரையில் விழுந்து நொறுங்கிய விபத்தில் 20 பேர் உயிரிழந்தனர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இருந்து சுமார் 4 ஆயிரம் கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கிரஸ்னோயார்ஸ்க் மாகாணத்தில் உள்ள துருகான்ஸ்க் மாவட்டத்தில் இருந்து நேற்று முன்தினம் இரு Mi-8 ஹெலிகொப்டர்கள் புறப்பட்டன. ஒரு ஹெலிகொப்டரில் பெற்றோல் கிணற்றில் பயன்படுத்தும் உபகரணங்கள் ஏற்றப்பட்டிருந்தன.

விழுந்த ஹெலிகொப்டர் தீப்பிடித்து வெடித்து சிதறிய விபத்தில் அதில் இருந்த 20 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இன்னொரு ஹெலிகொப்டர் பத்திரமாக சென்று சேர்ந்ததாக தெரிய வந்துள்ளது. (7)



# எபோலா வைரஸ் தாக்கம்; 35 பேர் உயிரிழப்பு



(கொங்கோ)

தென்னாபிரிக்க நாடான கொங்கோவில் மீண்டும் ஏற்பட்ட எபோலா வைரஸ் நோய் தாக்கத்தினால் 35 பேர் பரிதாபமாக உயிரிழந்ததாக அந்நாட்டு சுகாதாரத் துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்க நாடுகளில் 1976ஆம் ஆண்டுகளில் இருந்து கொடூரமான நோயாக கருதப்பட்டது எபோலா என்னும் உயிர்கொல்லி நோய்.

இந்த வைரசின் தாக்கத்தினால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். தென்னாபிரிக்காவின் வடமேற்கு நாடான கொங்கோவில் எபோலா நோய் பரவி வருவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில், கடந்த வாரம் கொங்கோவின் வடக்கு பகுதிகளில் 22 பேர் எபோலா வைரஸ் தாக்கி உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது கிழக்கு கொங்கோவில் எபோலா நோய் பாதிப்பு காரணமாக 35 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 879 பேருக்கு எபோலா பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனம் அனுப்பியுள்ள எபோலா வைரஸ் தடுப்பு மருந்துகள் மூலம் அதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்துள்ளது.

கொங்கோவில் பல்வேறு கிளர்ச்சியாளர்கள் குழுக்கள் இயங்கி வரும் நிலையில் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள எபோலா பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு தேவையான மருந்து உள்ளிட்ட உதவிப்பொருட்களை எடுத்து செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எபோலா கிருமியினால் இந்நோய் உண்டாக்கப்படுகிறது. இந்தக் கிருமியானது தொற்று ஏற்பட்டுள்ள ஒரு விலங்கின் இரத்தம் அல்லது உடல் திரவங்களால் பரப்பப்படுகிறது. பழம் உண்ணும் வௌவால்கள் கிருமியை பரப்புவதாக கூறப்படுகிறது. (7)

# பயங்கரவாதிகள் தாக்குதல் ஐம்பது தலிபான்கள் மரணம்

(காபூல்)

ஆப்கானிஸ்தான் நாட்டின் குனார் மாகாணத்தில் உள்ள பயங்கரவாதிகளின் பதுங்குமிடங்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 50 தலிபான்கள் கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் கிழக்கு பகுதியில் உள்ள பக்கிட்டா மாகாணத்துக்கு உட்பட்ட கார்டெஸ் நகரில் உள்ள ஷியா மசூதி ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையின்போது பயங்கரவாதிகள் நடத்திய மனித குண்டு



தாக்குதலில் 48 பேர் உயிரிழந்தனர்.

இதற்கு பழி வாங்கும் நடவடிக்கையாக குனார் மாகாணத்தில் உள்ள பயங்கரவாதிகளின் பதுங்குமிடங்கள் மீது விமானப் படை துணையுடன் பாதுகாப்பு படையினர் நேற்று முன்தினம் இரவு முதல் அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் தாக்குதலில் 50 தலிபான்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அவர்களின் பதுங்குமிடங்களும், ஆயுதக் கிடங்குகளும் அழிக்கப்பட்டன.

கொல்லப்பட்டவர்களில் அஸ்மார் மாவட்டத்தின் தலிபான் இராணுவ தளபதிகள் சுல்தான் முஹம்மத், மௌலவி ஹஸ்ரத் அலி மற்றும் காசியாபாத் மாவட்ட தலிபான் ராணுவ தளபதி மௌலவி இம்ரான் காஸி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் என்றும் தொடர்ந்து அங்கு தாக்குதல் நடந்து வருவதாகவும் ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

# தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்படாமல்

# இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வில்லை

## இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

முஸ்லிம்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் ஒழித்து விட்டு, அம்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது என்பதை தமிழ்த் தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும் என இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.



காத்தான்குடி தேசிய ஷுஹதாக்கள் நிறுவனத்தின் ஏற்பாட்டில் பள்ளிவாசல்கள் படுகொலை சம்பவத்தை நினைவு கூரும் 28ஆவது ஷுஹதாக்கள் தின பிரதான நிகழ்வு நேற்று முன்தினம் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த கொடூர சம்பவம் இடம்பெற முன்னர் வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக மாபெரும் அச்சுறுத்தல் இருந்து வருவதை நாங்கள் உணர்ந்தோம்.

ஆனால், இந்தளவு மோசமான அகோரமான ஒரு சம்பவம் இடம்பெறும் என்று நாங்கள் நினைக்கவில்லை. எந்தவொரு விடுதலை இயக்கமும் இவ்வாறு படுமோசமான ஒரு செயலை செய்யும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

நான் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடமும் பூர்த்தியாகாத நிலையில் தலைவர் மரஹூம் அஷ்ரப் தலைமையில் முஸ்லிம் களின் பாதுகாப்பு தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ, பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் சிறிபால ஆர்டிகல உள்ளிட்ட அரசியல் உயர் மட்டத்தில் அடிக்கடி பேச்சு நடத்திக் கொண்டிருந்த போதே இந்தக் கொடூர சம்பவம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஒரு வாரத்தில் ஏறாவூரிலும் படுமோசமான பள்ளிவாசல் படுகொலைச் சம்பவம் இடம் பெற்றது. இந்த ஷுஹதாக்கள் இரத்தம் சிந்தியதன் விளைவாகவே எம்மால் முழு கிழக்கு மாகாண முஸ்லிம்களையும் பாதுகாக்க முடிந்தது.

சர்வதேச ரீதியில் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டதால் முஸ்லிம்களை பாதுகாக்க வேண்டிய தேவை உணர்வு அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

காத்தான்குடி படுகொலை சம்பவத்தில் ஷுஹதாக்கள் சிந்திய இரத்தம் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கு பாதுகாப்பை வழங்கியது. நாங்கள் கேட்டதையெல்லாம் அரசாங்கம் வழங்கியது.

இராணுவ முகாம்களை கோரினோம் வழங்கினார்கள், காத்தான்குடியில் பொலிஸ் நிலையம் அமைக்குமாறு கோரினோம் அமைத்தார்கள், ஆயுதம் கோரினோம் வழங்கினார்கள்.

ஷுஹதாக்கள்படுகொலை சம்பவம், அவர்கள் சிந்திய இரத்தம் என்பவற்றால் நாங்கள் மன ரீதியாகவும் பலமடைந்தோம். இங்கிருந்த முஸ்லிம் இளைஞர்கள் இவ்வாறான சூழலில்ஷுஹதாக்களின் சிந்திய இரத்த உணர்விலேயே உருவாக்கப்பட்டார்கள். எம்மை விரட்டியடிக்க முற்படுபவர்களுக்கு பாடம் புகட்டி அவர்களுக்கு முன்பு நாங்கள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும்.

எமது பிரதேசத்தை முன்னேற்றவேண்டும்என்ற உணர்விலேயே நாங்கள் வளர்ந்தோம். இன்று நாங்கள் எமது பிரதேசத்தை கிழக்கு மாகாணத்தில் முக்கிய பிரதேசமாக அபிவிருத்தி செய்துள்ளோம்.

காத்தான்குடி படுகொலைக்கு பின்னர் மிகவும் அச்சுறுத்தலான சூழலில் எனது இருப்பிடத்தை மட்டக்களப்பு இராணுவ முகாமுக்கு மாற்றிக் கொண்டு அங்கிருந்து முஸ்லிம்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற சந்தர்ப்பத்தில், அச்சுறுத்தல்களுக்கு பயந்து காத்தான்குடியை விட்டு வெளியேற பலர் தயாரானார்கள்.

அப்போது நாங்கள் யாரையும் ஊரை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கவில்லை. மரணித்தாலும் இந்த மண்ணிலே தான் மரணிக்க வேண்டுமே தவிர யாரும் வெளியேற முடியாது எனக் கூறினோம். எனது இத்தீர்மானம் சமூக ரீதியாக எனக்கு ஏராளமான பிரச்சினைகளை ஏற்படுத்தியது.

எனினும், நாங்கள் அன்று ஊரை விட்டு போக அனுமதித்திருந்தால் இன்று கத்தான்குடி என்ற மண் இருந்திருக்காது.

அன்று ஆயுத ரீதியான பயங்கரவாதத்திற்கு நாங்கள் முகம் கொடுத்தோம். இன்று அரச அதிகாரிகளின் பயங்கரவாதத்துக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்களின் பூர்வீக காணிகளில் அவர்களை குடியேற்ற முடியாத அளவுக்கு தடையாக அரச அதிகாரிகள் செயற்படுகின்றனர். இதனை முறியடிப்பது என்பது அவ்வளவு இலகுவான விடயம் அல்ல.

தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்வதன் ஊடாக வடக்கு-கிழக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

தமிழ்மக்களும் - முஸ்லிம் மக்களும் ஒற்றுமைப்பட்டு வாழுகின்ற போது மாத்திரமே வடக்கு-கிழக்குப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மாறாக முஸ்லிம்களின் உணர்வுகளையும், உரிமைகளையும் ஒழித்து விட்டு அம்மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் வடக்கு-கிழக்குபிரச்சினைக்குஒருபோதும் தீர்வு காண முடியாது.

இந்த விடயத்தில் தமிழ் தலைமைகள் மிகத் தெளிவாக இருக்க வேண்டும். வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதாக இருந்தால் முஸ்லிம்களை தமிழ் மக்கள் கௌரவிக்க வேண்டும்.

முஸ்லிம்களின் உரிமைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கும் தேவைகளையும் நிவர்த்தி செய்வதற்கும் தமிழ் தலைமைகள் முன்வர வேண்டும். மாறாக தமிழ் தலைமைகள் தமது அரசியல் சுயலாபங்களுக்காக தமிழ் பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம், கோஷங்கள், விமர்சனங்களை முன்வைக்கின்றபோது ஒருபோதும் வடக்கு-கிழக்குப் பிரச்சி னைக்கு தீர்வு காண முடியாது என அவர் மேலும் தெரிவி த்தார். (இ-7)

# எம்.பிக்களின் சம்பள அதிகரிப்பை கூட்டு எதிர்க்கட்சியே கோரியது

## பிரதியமைச்சர் நளின் பண்டார வெளிப்படுத்தல்



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்ற யோசனை அரசாங்கத்தினால் முன்வைக்கப்படவில்லை எனவும் கூட்டு எதிர்க்கட்சியினரே இந்த யோசனையை முன்வைத்ததாகவும் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

குருநாகல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் பின்னர், ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில், உயர்நீதிமன்றம், மேல் நீதிமன்றங்களின் நீதிபதிகளுக்கான சம்பளம் அதிகரிக்கப்பட்டது. நீதிபதிகளின் சம்பளம் அதிகரிக்கப்படும் போது, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படுவது வழமையாக நடைபெறும் விடயம்.

எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு அரசாங்கத்தின் பிரதிநிதிகளோ, அமைச்சர்களோ எந்தக் கோரிக்கைகளையும்முன்வைக்கவில்லை.

அந்த கோரிக்கையை கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே முன்வைத்திருந்தார் எனவும்நளின் பண்டார தெரிவித்தார்.(இ-7)

## இன்று ஒரு தகவல்

### அவமானம் நமக்கல்ல!

ஒருவர் தன் நண்பருக்குத் தன் தோட்டத்தில் விளைந்த கொய்யாப் பழங்களைத் தன் இன்னொரு நண்பர் மூலம் கொடுத்தனுப்பினார்.

கொண்டு போய்க் கொடுத்தவருக்கு மிகச் சுமாரான வரவேற்பு. இந்த மனிதர் காயப்பட்டுப் போய் கொய்யாவைக் கொடுத்தவரிடம் குறைபட்டுக் கொண்டார். "நல்ல ஆள் பார்த்தீங்க கொய்யா கொடுப்பதற்கு!" என்றார்.

கொய்யா கொடுத்த நண்பர் என்ன சமாதானம் சொல்லியும் இவருக்கு மனமே ஆறவில்லை. தனக்குப் பெரிய அவமானம் இழைக்கப்பட்டு விட்டதாக எண்ணினார். இதை என்னிடமும் சொன்னார்.

நாம் சமாதானம் சொல்ல ஆரம்பித்தேன்.

"ஒரு கண்டக்டர் படிக்கட்டில் நிற்கும் பயணி மீதோ, சரிவரச் சில்லறை தராதவர் மீதோ, முன்னே நகராமல் வழியிலேயே நிற்பவர் மீதோ சத்தம் போட்டால், அது அந்த ஒரு குறிப்பிட்ட நபரை மட்டமாக நடத்திவிட்டதாகப் பொருள் கொள்ளக் கூடாது. பொதுவாகப் பயணிகள் மீது அவர் நல்லெண்ணம் கொண்டிருக்கவில்லை. என்றும்; நம்மைப் போன்ற சக பயணிகள் தொடர்ந்து இந்தத் தவறுகளைச் செய்து அவரை எரிச்சலூட்டி வைத்திருக்கிறார்கள் என்றும், அதன் விளைவாகவே அவரது கோபம் என்றும் நாம் கொள்ள வேண்டுமே தவிர, தனிப்பட்ட ஒரு கோவிந்தசாமியைப் பெயர் சொல்லி அழைத்து அவமானப்படுத்தவில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அப்பா மீதுள்ள கோபத்தை, அவரது மகனிடம் ஒரு வெளி நபர் காட்டினால் அதற்காக மகன் அவமானப்படுத்தப் பட்டதாக எண்ணக்கூடாது. இந்தக் கோபம் நம் அப்பாவைத்தான் போய்ச் சேரும் என்று சமாதானம் அடைய வேண்டும்.

ஒரு நாட்டின் தூதுவர் ஒருவர் மற்றொரு நாட்டில் அவமானப்பட நேர்ந்தால் அந்த அவமானம் அவருக்கல்ல. அவரது தேசத்தால் அவருக்கு நேர்ந்த அவமானம். தேசத்திற்காக அவர் அதை ஏற்றுக்கொண்டு, பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

அதேபோலதான் உங்கள் 'விடயமும், நீங்கள் ஒருவரின் பிரதிநிதியாகப் போனீர்கள். உங்களை யார் என்று கூட அவருக்குத் தெரியாது. நீங்கள் வேறு ஒருவரின் பழங்களைக் கொண்டு சென்றீர்கள். உங்களுக்கு நேர்ந்த அவமானம் என்பது உங்களைத் கருத்தில் கொண்டு செய்யப்பட்டதல்ல. பழம் அனுப்பினாரே அவருக்கு இவரிடத்தில் இவ்வளவுதான் மரியாதை. எனவே உங்களை நீங்கள் வருத்திக் கொள்ளாதீர்கள்" என்றேன்.

**லேனா தமிழ்வாணன்**

# ராஜபக்ஷ குடும்பத்தை இலக்கு வைத்தே புதிய அரசியலமைப்பு உருவாக்கம்

## மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இன்று இந்த நாட்டில் அதிகார பூர்வமற்ற எதிர்க்கட்சியாக செயற்பட்டு வரும் கூட்டு எதிர்க்கட்சியை யாரும் குறைத்து மதிப்பீடு செய்யக்கூடாது என்று எச்சரித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த, ராஜபக்ஷ குடும்பத்தை இலக்கு வைத்தே புதிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.**



கொழும்பு பத்திரிகை யொன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந் தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

இலக்கு வைத்து அரசி யல் அமைப்பு திருத்தங் களை மேற்கொள்வதால் தான் அரசியல் அமைப்பு, உருவாக்கம் செய்யப்படாத மருத்துவமாகவே காணப் படுகின்றது.

ராஜபக்ஷ குடும்பத்தை இலக்கு வைத்தே புதிய அர சியல் அமைப்பு உருவாக்கப் படுகின்றது. இன்று நாட்டில் அதிகாரபூர்வமற்ற எதிர்க் கட்சியாக செயற்பட்டு வரும் கூட்டு எதிர்க்கட்சியை குறை த்து மதிப்பீடு செய்யக்கூடாது என்றும் மகிந்த தெரிவித் துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்த லில் எனக்கு 58 இலட்சம் வாக்குகள் கிடைக்கப் பெற் றது. பின்னர் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், கூட்டு எதிர்க்கட்சிக்கு உள்ள செல் வாக்கு நிரூபிக்கப்பட்டுள் ளது.

எனவே ஒரு குடும்பத்தை பழிவாங்குவதற்காக அரசி யல் அமைப்பில் பல்வேறு சரத்துக்களை உள்ளடக்கும் நோக்கில் அரசியல் அமைப் பினை உருவாக்குவது பிழை யான முன்னுதாரணமாகும் என்றும் மகிந்த சுட்டிக்காட் டியுள்ளார்.

இதேவேளை, அரசாங் கம் எவ்வாறான சரத்துக் களை அரசியல் அமைப்பில் கொண்டு வந்தாலும் ஜனா திபதி தேர்தலில் எமது கட்சி யின் வேட்பாளரே நிச்சயம் வெற்றியீட்டுவார் என முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# அமெரிக்க இராணுவ வீரர்கள் அ'புரத்தில் 14 நாட்கள் சேவையில்

(அநுராதபுரம்)

அமெரிக்க இராணுவத் தின் 65 வீரர்கள் இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் அநுராத புரம் மற்றும் அதனை அண் டிய பிரதேசங்களில் பல் வேறு வேலைத்திட்டங்க ளில் ஈடுபடவுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.




"பசுபிக் ஏஞ்சல்" எனும் பெயரில் இந்நடவடிக்கை அழைக்கப்படுகின்றது. இதன் கீழ் சுகாதாரம், பல் மருத் துவ சேவை, சிறுவர் நல சேவை, பொறியியல் சேவை கள் என்பன அப்படையின ரால், அப்பிரதேச வாசிகளு க்கு முன்னெடுக்கப்படவுள் ளன.

இதில் இலங்கை விமா னப் படைப் பிரிவு வீரர்க ளும் கலந்துகொள்ளவுள்ள தாகவும் கூறப்படுகின்றது.

இப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளை புதுப்பித் தல் நடவடிக்கைகளும் இவர் களினால் முன்னெடுக்கப்பட வுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டம் இரு நாடுகளினதும் இரா ணுவ வீரர்களிடையே புரிந் துணர்வை ஏற்படுத்தும் என வும், இதனால், பொது மக் களும் நன்மையடைவதாக வும் இலங்கைக்கான அமெ ரிக்க தூதுவர் ரொபர்ட் ஹில் மன் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆயுள்வேத வைத்தியசாலைக்குள் புதையல் தோண்டிய ஐவருக்கு விளக்கமறியல்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, வாகரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டலடி பகுதியில் உள்ள ஆயுள்வேத வைத்தியசா லையொன்றின் கட்டடப் பகுதிக்குள் புதையல் தோண் டும் முயற்சியில் ஈடுபட்ட ஐவரை கைது செய்துள்ள தாக வாகரை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



ஆயுள்வேத வைத்திய சாலையின் பொறுப்பு வைத் தியர் மற்றும் அப் பகுதி யிலுள்ள கோயில் பூசகர் உட்பட ஐவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

குறித்த வைத்தியசாலை கட்டடத்துக்குள் புதையல் தோண்டப்படுவதாக பொலி ஸாருக்கு கிடைத்த இரகசி யத் தகவலுக்கிணங்க வைத் தியசாலையை சுற்றி வளை த்த பொலிஸார் இவர்கள் ஐவரையும் கைதுசெய்துள் ளதுடன் புதையல் தோண்டு வதற்கு அவர்கள் பயன்படு த்திய உபகரணங்களையும் கார் ஒன்றினையும் கைப்பற் றியுள்ளனர்.

அத்துடன் கைதுசெய்யப் பட்டவர்களை வாழைச்சேனை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது நீதவான் அவர்களை நாளை மறுதி னம் 8 ஆம் திகதி வரை விள க்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-7)

# உயர் பொலிஸ் அதிகாரிகள் இருபது பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் பரி ந்துரையின் பேரில் பொலிஸ் ஆணைக்குழுவின் அனு மதியுடன் 20 பொலிஸ் உய ரதிகாரிகள் இடமாற்றம் செய் யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டு ள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அந்த இடமாற்றங்க ளில் 6 பிரதி பொலிஸ்மா அதி பர்கள், 3 பொலிஸ் அத் தியட்சகர்கள், 2 உதவி பொலிஸ் அத்தியட்சகர் கள், 3 பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் 6 பொலிஸ் பரிசோதகர்க ளும் அடங்குவதாக தெரி விக்கப்பட்டுள்ளது. (இ-7)








தென்மராட்சி கல்வி வலயம் தொடர்ச்சியாக ஐந்தாவது ஆண்டாக நடத்திய நாதநர்த்தன வர்ணமும் சித்திரக் கண்காட்சியும் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி ஹன்ட் சித்திரக் கலைக்கூடத்திலும் நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்திலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் பிரதம விருந்தினராகவும் தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் கனடா கிளைத் தலைவர் சி.சுரேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் தேசிய கல்வி நிறுவகத்தின் நடன செயற்றிட்ட அதிகாரி திருமதி நி.திருக்குமரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களின் நடன ஆற்றுகைகள் இடம்பெற்றன. இதன்போது கடந்த ஆண்டு இடம்பெற்ற நாதநர்த்தன வர்ணம் நிகழ்வில் சிறப்பு ஆற்றுகைகள் வழங்கிய பாடசாலைகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (படங்கள்:-சுபேசன், கிஷோர்)

# ஐம்பது வருடங்களுக்கு மேலாக எவ்வித புனரமைப்புமின்றி வாழைத்தோட்டம் வீதி



(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட இடைக்குறிச்சி-மாசேரி எல்லை வீதியாகவும் கொடிகாமம்-பருத்தித்துறை வீதியுடன் இணைக்கின்ற வாழைத்தோட்டம் வீதியானது 50 வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்புமின்றி குண்டும்குழியுமாகக் காணப்படுவதுடன் கற்கள் சிதைவடைந்து மணல் வீதியாக மாறியுள்ளது.

இந்த வீதி சுமார் 4 கிலோமீற்றர் நீளம் கொண்டதாகும். யுத்தசூழ்நிலையின்போது இவ்வீதி பற்றைகள் மூடி போக்குவரத்திற்கு ஏற்ற வீதியாக இருக்கவில்லை. அதுமட்டுமன்றி இராணுவ முகாம்கள் அமைந்திருந்தமையால் இந்த வீதியை மக்கள் பயன்படுத்த அஞ்சினர். மாற்றுப் பாதைகளின் ஊடாகவே தமது தேவைகளை நிறைவேற்றினர். இராணுவத்தினர் இப் பகுதியை விட்டு வெளியேறிய பின்பு தான் மக்கள் இந்த வீதியை போக்குவரத்திற்கு பயன்படுத்தினர். மேலும் பற்றைகள் மூடியிருந்தமையால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலை காணப்பட்டது. சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவையே பயணிக்கக்கூடியதாக இருந்தன. அது மட்டுமன்றி வழிப்பறிகளும் திருடர் தொல்லைகளும் அதிகரித்துக் காணப்பட்டன. இந்த நிலைமை தொடர்பாக இப் பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு சென்றமையைத் தொடர்ந்து பிரதேச செயலகத்தின் மூலம் இவ்வீதியை மூடி இருமருங்கிலும் காணப்பட்ட பற்றைகள் J.C.P. இயந்திரத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் இவ்வீதியை அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் வீதி புனரமைப்பு செய்யப்படாமையால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வீதியைப் புனரமைக்குமாறு அரசியல்வாதி கள் மற்றும் உயர் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

எனவே அதிகளவானோர் பயன்படுத்தும் இவ்வீதியை விரைவாக புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

# மின் விளக்குகள் பொருத்தல்



(யாழ்ப்பாணம்)

வட்டாரத்துக்கு ஒளியூட்டல் என்ற செயற்றிட்டத்தின் கீழ் நல்லூர் பிரதேச சபையின் இரண்டாம் வட்டார உறுப்பினர் மதுசுதனால் பழுதடைந்த மின்விளக்குகள் திருத்தம் செய்யப்பட்டன.

அத்தோடு புதிய மின் விளக்குகள் இனம் காணப்பட்ட இடங்களில் பொருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அனைத்து பகுதிகளுக்கும் இன்னும் சில வாரங்களில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு விடும் என உறுப்பினர் மதுசுதன் தெரிவித்தார். (இ-7)

# ஆலயத்திற்கு நிதியுதவி



(கரணவாய்)

கரணவாய் வடக்கு கொற்றாவத்தை செட்டித்தறை சித்தி விநாயகர் ஆலயப் புனரமைப்புத் தேவைகளுக்காக வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஒரு இலட்சம் ரூபாவுக்கான காசோலையும் கரவெட்டி பிரதேச காரியாலயத்தில் பிரதேச செயலர் முன்னிலையில் ஆலய பரிபாலன சபைத்தலைவரிடம் அண்மையில் வழங்கினார். (இ-60)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 3 விதி எண் 4

குரு, ராகு ஆதிக்கம் கொண்ட இவர்கள் ஞானமுடையவர்கள். ஞானத்தின் தூண்களாக விளங்குவார்கள். தன்னுடைய இனத்தில் உரிமைக்காகப் போராடுவார்கள். நல்ல குணம் படைத்த இவர்கள் தைரியசாலிகள். நல்ல நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். வாகனப் பிரியர்கள். கதை, காவியம், கவிதைகள் புனைவதில் வல்லவர்கள். புகழ் பெறும் பாக்கியமுடையவர்கள். பேரறிவும் பேச்சுத் திறனும் உடைய இவர்கள் வழக்கறிஞர்களாகவும் சிறப்பாகப் பணியாற்றுவார்கள். நன்றாகப் பேசியே காரியம் சாதிப்பதில் வல்லவர்கள். பொதுச் சேவைகள் செய்வார்கள். வாய்ப் பேச்சினால் சம்பாதிக்கும் திறனுடையவர்கள். ஆண், பெண் இருபாலாரிடத்திலும் நல்ல நட்பு வைத்திருப்பார்கள்.

இருவருடைய அறிவுரைக்காகப் பலபேர் காத்துக் கொண்டிருப்பார்கள். சிறந்த தொழில் அதிபர்களாகவும், நீதியை நிலைநாட்டும் சட்ட வல்லுநர்களாகவும் இருப்பார்கள். சிறந்த நீதிபதியாக இருப்பார்கள். அரசியல், சினிமா, விளையாட்டு போன்ற துறைகளில் ஈடுபட்டு பெரும் புகழ் பெறுவார்கள். சிறந்த அமைச்சர்களாகவும் அறங்காவல் துறை அதிகாரியாகவும், பெரிய மகான்களாகவும் இருப்பார்கள். அடிக்கடி வெளியூர், வெளிநாட்டு சுற்றுப் பயணத்தில் ஈடுபடுவார்கள். இயற்கைக் காட்சிகள், மலைப்பிரதேசங்கள் சுற்றிப்பார்ப்பதில் ஆர்வமிக்கவர்கள். சொல்லிலும் பேச்சிலும் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்திருக்கும். எதையும் விஞ்ஞானக் கண்ணோட்டப் பார்வையோடுதான் உற்றுநோக்குவார்கள். வேகமாக நடக்கும் பழக்கம் உள்ளவர்கள். வசீகரமான முகமுடையவர்கள். இளமையில் போராடித் தன் சுயமுயற்சியால் மிக உயர்ந்த நிலைக்கு வருவார்கள். குடும்ப பாசமும் தியாக உணர்வும் அதிகமாக இருக்கும்.

பிறருடைய காரியங்களுக்காகச் சென்று மாட்டிக் கொள்வார்கள். இவர்கள். சோதனைகளை அதிகம் சந்திக்கக் கூடியவர்கள். இவர்களுக்கு வரும் இடர்பாடுகளைத் தைரியத்துடன் சந்தித்து வெற்றி பெறுவார்கள். பணம் உள்ள போது குதூகலமாகச் செலவு செய்வார்கள். புகழையோ, பதவி வாய்ப்புகளையோ எதிர்பார்க்காமல் உழைப்பார்கள். மிகவும் அத்தியாவசியமான தொழிலையே செய்வார்கள். தனிப்பட்ட உதவும் குணமுடையவர்கள். தன்னை நம்பியவருக்காகத் தியாகம் செய்யக்கூடியவர்கள். நல்ல பல நண்பர்களைப் பெற்றிருப்பார்கள். புகழ் பெற்ற மருத்துவர் ஆவார்கள். புதிய ஆராய்ச்சிகள் செய்யும் விஞ்ஞானிகள் ஆவார்கள். மதகுருவாகவும், நன்னடத்தையை போதிக்கும் ஞானியாகவும், பிறரைக்காப்பாற்றும் இராணுவ வீரர்களாகவும் திகழ்வார்கள். ஆன்மீகப் பற்று உடையவர்கள்.

ஒவ்வொரு செயலிலும் தனித்தன்மையிருக்கும். எதையும் செவ்வனே செய்து முடிக்கும் திறமைசாலிகள். பலபேர்கள் இவர்களிடம் யோசனை




கேட்க முன்வருவார்கள். மெதுவாக சிந்தித்து விரைவாகப் பதிலளிப்பார்கள். தாயையும், தாய் நாட்டையும் மதிப்பார்கள். பிறருக்கு உதவிகள் செய்யும் உயர்ந்த குணமிருக்கும். சமுதாயத்தில் முக்கிய பிரமுகராக இருப்பார்கள். சுற்றுலாப் பயணம் மனம் விரும்பிச் செய்வார்கள். இவர்கள் பேச்சு, எழுத்துக்கள் மூலம் உலகையே உலுக்கக்கூடிய நபர்கள். பெருந்தன்மை மிக்க நண்பர்களாகவும் நடந்து கொள்வார்கள். தன்னம்பிக்கை, துணிச்சல் அதிகமிருக்கும். பார்க்கக் கவர்ச்சி நிரம்பிக் காணப்படுவார்கள். பெண்கள் இவர்களிடம் எளிதில் மயங்குவார்கள். மது, மங்கை, சூது போன்ற கெட்ட விடயங்களை மனம் லயித்து அனுபவிப்பார்கள். பொதுஜன உபகாரியாகப் பலருக்கு உதவும் எண்ணத்துடன் வாழ்வார்கள். நண்பர்கள் இவர்களை விட்டுப் பிரிய மாட்டார்கள். புதிய யாத்திரை செய்ய ஆர்வமிருக்கும். செலவுகள் அதிகம் செய்வார்கள். இவர்களுக்குச் சேமிப்பது என்பது கடினமான விடயமாகும். எதார்த்தவாதிகள். புன்னையுடன் கூடிய முகமிருக்கும். தெளிவான சுயசிந்தனை இருக்கும். பொது வாழ்வில் பிரகாசிப்பார்கள். சில நேரங்களில் ஆடம்பரச் செலவுகள் செய்து பணத்தையெல்லாம் காலியாக்கி விடுவார்கள். வீட்டுக்குப் பிள்ளைகள் போல இல்லாமல் நாட்டுக்குப் பிள்ளைகள் போல நடப்பார்கள். கவர்ச்சியின் மூலம் பணம் ஈட்டக் கூடியவர்கள்.

இவர்கள் அவசரத்தன்மை உடையவர்கள். மறைபொருள் இரகசியங்களை வெளிக் கொண்டு வருவார்கள். பேரம் பேசுவதில் வல்லவர்கள். சாமர்த்தியசாலிகள். சூழ் நிலைக்கேற்ப தம்மைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவார்கள். நல்ல மனைவி மக்கள் அமைவார்கள். இளம் வயதில் சந்நியாசமும் கிடைக்கும். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
3,12,21,30,1,10,19,28,5,14,23

துரதிர்ஷ்ட திகதிகள்
6,15,24

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர் நீலம், மஞ்சள், ரோஸ், ஒரேஞ், கத்தரிப்பூநிறம்.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை, சிவப்பு, இருண்ட நிறங்கள்

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்கபுஷ்பராகம், கோமேதகம், எமிதிஸ்ட், ஒபல், அக்கோமரின்.

(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

ஐரோப்பியரான பிரித்தானியர் டச்சுக்காரரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றி குறிப்பாகத் தமிழ் பிரதேசங்களை ஆட்சி செய்தமை பற்றியும், அக் காலகட்டத்தில் தமிழரின் சமய, கலாசார, சமூக, மொழி, பொருளாதார நிலைமைகள் எவ்வாறு காணப்பட்டன என்பது பற்றியும் அமைந்த வரலாற்றை உள்ளடக்கியதாகும்.

இவ் அத்தியாயம் பெரும்பாலும் பிரித்தானிய காலத்துக்குரிய மூலாதாரங்களை ஆதாரமாகக் கொண்டு இந் நூலாசிரியரால் ஏற்கனவே ஆய்வு செய்து வெளியிடப்பட்ட நூலில் உள்ளவற்றையும், புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவற்றையும் உள்ளடக்கிய அத்தியாயமாக அமைகிறது. இவ் அத்தியாயம் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தமிழரும், தமிழ்ப் பிரதேசங்களும் எவ்வாறான பாதிப்புக்களை அடைந்துள்ளன என்பதை விளங்கிக் கொள்வதற்கு மிக முக்கியமாக அமைகிறது.

எட்டாவது அத்தியாயம் கி.பி 1850களிலிருந்து 1900 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் தமிழர் பிரதேசம் எவ்வாறு பிரித்தானிய ஆதிக்கவர்த்தகத்தினால் சீர்குலைக்கப்பட்டது என்பது பற்றியதாக அமைகிறது.

அத்தோடு அவ்வாறான ஒரு நிலை தமிழர்களின் சுய எழுச்சிக்கும், தேசிய எழுச்சிக்கும் எவ்வாறு வித்திட்டது என்பது பற்றி மிகத் தெளிவாகக் கூறுகின்ற அத்தியாயமாக அமைகிறது.

ஒன்பதாவது அத்தியாயம் 1900 களில் இருந்து 1948 இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரமடைந்தது வரையுள்ள காலப் பகுதியைக் கொண்டது. இவ் அத்தியாயம் குறிப்பாக பிரித்தானிய ஆட்சியாளரின் புதிய அரசியற் சீர்திருத்த நடவடிக்கைகள் பற்றியும், அச் சீர்திருத்தங்கள் எவ்வாறு தமிழரின் அரசியற் சுதந்திரத்தை வெகுவாகப் பாதித்தது என்பது பற்றியும், தமிழர் தமது பாரம்பரியப் பிரதேசத்தின் அடையாளத்தை எவ்வாறு இழந்தனர் என்பது பற்றியும் உள்ள விடயங்களைப் பல முதற்தர ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டும், அரசியல் அறிஞர்களின் ஆய்வுகளின் முடிவுகளை ஆதாரமாகக் கொண்டும் எழுதப்பட்டது.

தமிழர் தமது சுதந்திரத்தை இழந்த நிலைமை இன்றுவரை தொடர்வதற்கும், தமிழர் படும் சொல்லொணாத் துயரங்களுக்கும் அடிப்படைக் காரணம் பிரித்தானியரின் ஆட்சியும், அவர்களின் அதிகாரமும், அவர்களின் தவறான அரசியல் அணுகுமுறைகளும், அரசியற் சீர்திருத்தங்களுமே என்பனி பற்றி மிகத் துல்லியமாகவும், தெளிவாகவும் பல வகையான முதற் தரவுகளின் மூலம் விளக்கப்பட்டுள்ளன.

இறுதியான பத்தாவது அத்தியாயம் 1948 இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றதில் இருந்து 1983கள் வரையுள்ள காலப்பகுதியை உள்ளடக்கியதாக அமைகிறது. இவ் விடயம் பற்றி பல்வேறு ஆய்வு நூல்கள் வெளி வந்ததன் விளைவாக மிகவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் மேற்படிக் காலகட்டத்தில் சிங்களப் பெரும்பான்மை அரசுகள் எவ்வாறு தொடர்ந்து தமிழர்களின் அரசியல் உரிமையையும் மொழி, மத, கல்வி, பொருளாதார உரிமைகளையும் திட்டமிட்ட முறையில் பறித்தன என்பது பற்றியும், தமிழருடைய பாரம்பரியப் பிரதேசங்கள் எவ்வாறாக திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாக அரச உதவியுடன் மாற்றப்பட்டன போன்ற முக்கியமான விடயங்கள் பற்றியும் தெளிவாக விளக்குகின்ற அத்தியாயமாக அமைகிறது.

அத்தோடு மலையகத்தில் வாழும் இந்தியத் தமிழர்களின் பிரஜாவுரிமையைச் சட்ட மூலம் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கியதோடு, தமிழரின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு குறைத்தது என்பது பற்றிய விபரமும் மிக முன்னுரிமை கொடுக்கப்பட்டு, முதற்தர ஆவணங்களின் சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இவ்வாறான பெரும்பான்மைச் சிங்கள அரசின் பாரபட்ச நடவடிக்கைகளால் தமிழர் தமது உரிமைகளை இழந்த நிலையில், சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையின் கீழ் அவற்றை மீளப் பெறுவதற்காக முதலில், ஜனநாயக வழி முறைகளில் தொடர்ச்சியாக 1972கள் வரை போராடினர் என்பது பற்றி காலவரன் முறைப்படி நடைபெற்ற முக்கியமான வரலாற்றுச் சம்பவங்களை எடுத்துக்காட்டி விளங்க வைக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக வழிகளில் போராடி சமஷ்டி ஆட்சி முறையின் கீழ், தமிழர் தாயகப் பிரதேசங்களாகிய வடக்கு, கிழக்கிற்கு தனி நிர்வாக அமைப்பு முறையை ஏற்படுத்த முடியாமற்போன கட்டத்தில், 1972 இல் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்குத் தமிழ்த் தலைவர்கள் தள்ளப்பட்டனர்.

இறுதியாக 1976 இல் தமிழரின் அரசியல் பிரச்சினைகளுக்கு தனியான தமிழ் ஈழம் அமைப்பதே வழி என்ற முடிவுக்கு வந்தனர். இவ் வேளையில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் ஜனநாயக வழி முறைகளில் போராடிச் சிங்கள பெரும்பான்மை அரசிடம் இருந்து எதனையும் ஆயுதம் ஏந்திப் போராடித் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களை மீட்டெடுத்து தமிழ் ஈழம் அமைப்பது என்ற முடிவிற்கு வந்தனர்.

இதன் விளைவாக தமிழ் அரசியல் தலைவர்கள் பின்தள்ளப்பட்டு இளந் தலைமுறையினர் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தைத் தமது கைகளில் எடுத்துக் கொண்டனர். இவ்வாறான அரசின் நடவடிக்கைகளும் தமிழ் அரசியற் தலைவர்களின் ஜனநாயக வழி முறையில் அமைந்த போராட்டங்களும், தமிழ் இளைஞர், யுவதிகளின் அரசியற் சிந்தனைகளும், அணுகுமுறைகளும் தமிழர் தேசியவாத எழுச்சியை மிக வேகமாக முன்னெடுத்துச் சென்றன.

மேற்படி காலகட்ட முக்கிய அரசியல் நிகழ்வுகளை காலவரன் முறைப்படி மிகவும் சுருக்கமாகவும் அதேவேளை எவரும் விளங்கக்கூடிய முறையிலும் தெளிவாக ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 1983 இலிருந்து தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் மிகவும் தீவிரம் அடைந்து இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே இக்கால அரசியல் வரலாறு பற்றி ஆராய வேண்டி எதிர்கால அரசியல் வரலாற்று மாணவர்களுக்குரிய மிகப் பாரிய பொறுப்பாகும்.

(தொடரும்)



இலங்கையின் இந்திய தமிழ்க் காங்கிரஸ்: 1947 பாராளுமன்றத் தேர்தலில் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை இந்திய தமிழ்க் காங்கிரஸ் 8 தொகுதிகளில் போட்டியிட்டு 7 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இக்கட்சி இந்தியப் பிரதமர் நேருவின் உதவியுடன் 1936 இல் உருவாக்கப்பட்டது.

“1976 இல் தமிழரின் அரசியல் பிரச்சினைகளுக்கு தனியான தமிழ் ஈழம் அமைப்பதே வழி என்ற முடிவுக்கு வந்தனர். இவ்வேளையில் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் ஜனநாயக வழி முறைகளில் போராடிச் சிங்கள பெரும் பான்மை அரசிடம் இருந்து எதனையும் ஆயுதம் ஏந்திப் போராடித் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களை மீட்டெடுத்து தமிழீழம் அமைப்பது என்ற முடி விற்கு வந்தனர்.”



வல்வெட்டித்துறையில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு செல்வநாயகம் உரையாற்றுகையில்...

# இளைஞர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி



(சாவகச்சேரி)

சாவகச்சேரி இளைஞர் கழக சம்மேளனத்தின் இளைஞர் முகாம் அண்மையில் தென்மராட்சி மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்தில் மூன்று தினங்கள் இடம்பெற்றன.

இதன் ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபையின் உபதவிசாளர் அ.பாலமயூரன் கலந்து கொண்டு இளைஞர் முகாமைத் தொடக்கி வைத்தார்.

இந்த இளைஞர் முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு பயிற்சியை நிறைவு செய்தனர்.

பயிற்சி முகாமில் இளைஞர்களுக்கு பல்வேறுபட்ட தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (இ-30)

# சில ஊடகங்கள் மீது அரச தரப்பு அச்சுறுத்தல்

## பெங்கமுவே தேரர் கண்டனம்

(கொழும்பு)

ஊடக சுதந்திரத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஜனாதிபதியும், பிரதமரும் கூறினாலும் அரசாங்கத்தின் சில தரப்பினர் ஊடகங்களை அச்சுறுத்தி வருவதாக தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர் குற்றம் சாட்டியுள்ளார். கொழும்பு சிங்கள ஊடக மொன்று நேற்று இவ்வாறு வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், வன்முறை அரசியலை செயற்படுத்தி வந்த ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கப் போவதில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அதிகாரம் கையை விட்டு சென்ற பின்னர், அவர்கள் மக்களுடன் இருக்க முடியுமா? என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சில ஊடகங்கள் மீது அரசியல்வாதிகள் ஏற்படுத்திய அச்சுறுத்தல்களை கண்டிக்கின்றோம் என பெங்கமுவே நாலக தேரர் மேலும் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 32 செவ் 1 இல்
உயரம்: 155cm
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/8768

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Eng/சொந்ததொழில்
தொ.இ: B/8770

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: செவ் 8 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/அவுஸ்ரேலியாNOT PR
தொ.இ: B/8772

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா:24செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/லண்டன் PR
தொ.இ: B/8775

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 63 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர் நோர்வே
தொ.இ: G/021

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 42 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/027

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 48 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
தொ.இ: G/035

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 31 செவ் இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: G/041

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1479

## செல்வி

வேஷம் இல்லாத உண்மை அன்பு ஒன்றே போதும் இந்த உலகத்தை வென்றிட



## செந்தூரன்

எக்ஸாம்ல தெரிஞ்சா பொயின்ட் பொயின்டா எழுதுறாங்க... கொஞ்சமா தெரிஞ்சா பந்தி பந்தியா எழுதுறாங்க, எதுவுமே தெரியலையா எல்லாப் பக்கமும் பில் பண்றாங்க



## செல்வா

நான் சாதிக்கனும்னு கண்ணு முழிச்சா



கடவுள் என்னைச் சோதிக்கனும்னு கண்ணு முழிப்பார் போல

## குமுதா

உங்களை வளப்படுத்திக் கொள்வதற்கு நேரம் செலவழியுங்கள்



மற்றவர்களை விமர்சிப்பதற்கு நேரம் இல்லாமல் போய்விடும்

## காந்தி

எவ்வளவு விலையுயர்ந்த மெத்தையும் கொடுத்துவிடாது



இப்படி அப்பாவின் மார்பில் தூங்கிய சுகமான தூக்கத்தை

## குமரன்

காலில் செருப்புகூட இல்லை... எங்கேயாவது நுங்கு விற்கக் கண்டால் பேரம் பேசாமல் வாங்குங்கள்.... நமது விவசாயிகள் வாழட்டும்!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# “சுதந்திரக்கட்சி தனியாக ஆட்சியமைக்கும்” அதுவரை ஐ.தே.கவுடன் பயணிக்க வேண்டும்

## அமைச்சர் விஜிதமுனி அறிவுரை



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தனியான அரசாங்கம் ஒன்றை அமைக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, அதற்கான உரிய நேரம் வரும்வரையில் காத் திருக்க வேண்டுமெனவும், அது வரையில் ஐ.தே.கவுடன் ஒன்றித்து பயணிக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சீனாவிடமிருந்து தேர்தலுக்கு பணம் பெற்றவர் களே, தற்போது அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்து இருந்திருந்தால், துறைமுகம் மாத்திரமல்லாது விமான நிலையங்களையும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்திருப்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)





**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை சனசமூக நிலையங்களை இணைத்து சிரம தானப் பணிகளை கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பித்துள்ளது. இவ்வகையில் முதற்கட்டமாக புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தின் சுகாதாரக் குழுவுடன் இணைந்து சுன்னாகம் - புத்தூர் வீதியின் இரு மருங்கிலும் காணப்படும் பற்றைகள் சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மற்றும் கலைமதி சனசமூக நிலையத்தின் சுகாதாரக் குழு உறுப்பினர்கள், பிரதேச சபையின் உறுப்பினர்கள், பணியாளர்கள் இச் சிரமதானப் பணியில் பங்கேற்றனர்.**

# போராட்டங்களால் ஆட்சியை ஒருபோதும் கவிழ்க்க முடியாது

## மகிந்தவுக்கு மானப்பெரும பதிலடி

(கொழும்பு)

“இராணுவ தலைமையகத்திற்கு சொந்தமான காணியை சீனாவிற்கு தரை வார்த்து கொடுத்தவர்கள் இன்று இராணுவத்தினரது உரிமை தொடர்பில் முதலை கண்ணீர் வடிக்கின்றமை வேடிக்கையாகவே காணப்படுகின்றது” என பிரதியமைச்சர் அஜித் மானப்பெரும தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொதாவில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேசத்திற்கு இராணுவத்தை காட்டிக் கொடுத்த பயனற்ற அரசாங்கத்தை வீட்டுக்கு விரட்டுவோம் என்று மகிந்த ராஜபக்ஷ போராட்டத்தை முன்னெடுத்துள்ளார். 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நாட்டு மக்கள் பயனற்ற அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பி வைத்ததை மகிந்த ராஜபக்ஷ மறந்து விட்டார்.

பல அரசியல் விடயங்களை மூடி மறைப்பதற்காகவே ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தேசிய அரசாங்கம் இராணுவத்தை காட்டிக் கொடுத்துள்ளது என்று குற்றம் சாட்டுபவர்கள் முன்னாள் இராணுவத் தளபதியை சிறையிலடைத்து சித்திரவதை செய்தமை மாத்திரம் இராணுவ காட்டிக் கொடுப்பு இல்லையா?.

இதுவரை காலமும் எந்த தேசிய வளங்களும் பிற நாடுகளுக்கு விற்கப்படவில்லை. ஆனால் பொய்யான குற்றச்சாட்டுக்களை குறிப்பிட்டு தொடர்ந்து அரசியல் ரீதியில் மக்களை திசை திருப்பி வருகின்றனர்.

அம்பாந்தோட்டை துறைமுகம் உட்பட தேசிய வளங்கள் பிற நாடுகளுக்கு ஒப்பந்த அடிப்படையிலே வழங்கப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கத்தில் பிற நாடுகளுக்கு எமது வளங்கள் தாரை வார்க்கப்பட்டமை தற்போது நினைவுபடுத்த வேண்டும்.

இராணுவ தலைமையகத்திற்கு சொந்தமான காலிமுகத்திடலில் காணப்படும் காணியினை சங்ரிலா நிறுவனத்திற்கு வழங்கியது யார்? தேசிய அரசாங்கமா? மறுபுறம் கொழும்பு துறைமுக அபிவிருத்திப் பணிகளை சீனாவிற்கு முழுமையாக வழங்கியது யார்? என்ற விடயத்தை மறந்து தற்போது இராணுவ உரிமை தொடர்பில் முதலை கண்ணீர் வடிக்கின்றனர்.

இவ்வாறு பல தேசிய வளங்கள் மறைமுகமாக பிற நாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளது. சீன நிறுவனம் வழங்கிய தேர்தல் நிதி தொடர்பில் மகிந்த ராஜபக்ஷ இதுவரை காலமும் எவ்வித பதிலும் குறிப்பிடவில்லை. இவரது அமைதியே குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. வெகு விரைவில் இவர் இதற்கு தகுந்த பதிலை குறிப்பிட வேண்டும்.

இன்று நாட்டில் காணப்படுகின்ற ஜனநாயகம் அன்று காணப்படவில்லை. வெள்ளைவான் விவகாரம், ஊடகவியலாளர் படுகொலை மற்றும் காணாமலாக்கப்பட்டமை, நீதித்துறை அவமதிக்கப்பட்டமை, தேர்தல் ஆணைக் குழு தனது சுயாதீனமிழந்து செயற்பட்டமை போன்ற எண்ணற்ற விடயங்கள் அன்று இடம் பெற்றன. இதன் தொடர்ச்சியை மீண்டும் நிலைநாட்டவே எதிர்த்தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய அரசாங்கத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை திருத்திக் கொண்டு எதிர்வரும் தேர்தலை எதிர் கொள்வோம். போராட்டங்களால் ஆட்சியை ஒருபோதும் கவிழ்க்க முடியாது.

ஏனெனில் தேசிய அரசாங்கம் ஜனநாயக ரீதியில் உருவாகியது. கடந்த அரசாங்கத்தின் ஊழல்கள் வெகு விரைவில் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்படும். அப்போது இவ்வாறான பகிரங்க போராட்டங்கள் எதுவும் இடம் பெறாது” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# செய்தித்துளிகள்

### பிரதேசசபை உறுப்பினர் தாக்கப்பட்ட வழக்கில் இருவருக்குப் பிணை

(பதுளை)

பதுளை பிரதேசசபையின் தமிழ் உறுப்பினர் முரளிதரன் தாக்கப்பட்டமை தொடர்பில் பதுளை பொலிஸார் இருவரைக் கைது செய்து பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர். பதுளை நீதவான் நயந்த சமரதுங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிபதி அவ்விருவரையும் தலா ஒரு இலட்ச ரூபா சரீரப் பிணையில் விடுவித்தார். (இ-7)

### துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

(கொழும்பு)

மினுவாங்கொடை பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஒருவர் பலியாகியுள்ளார். மினுவாங்கொடையட்டியான சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் 68 வயது மதிக்கத்தக்க ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்நிலையில் குறித்த துப்பாக்கிச்சூடு தொடர்பில் மேலதிக விசாரணைகளை மினுவாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### 400 கிலோ நண்டுகளுடன் 6 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

யால சரணாலயத்தின் புதவ நீரேரியில் இருந்து சுமார் 400 கிலோவுக்கும் அதிகமான நண்டுகளை பிடித்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் திஸ்ஸமஹாராம நீதவானின் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் தலா 35 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட நண்டுகளை நீதிமன்ற அனுமதியின் பேரில் மீண்டும் குறித்த நீரேரியில் விட வனவிலங்கு திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

### எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில் அடுத்தவாரம் ஐ.ம.சு.கூ. தீர்மானம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் அடுத்த வார இறுதிக்குள், சபாநாயகர் கரு ஜெயசூரியவிடம் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

அக் கூட் டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் கலந்துரை யாடியதன் பின்னர் தமது தீர்மானம் தொடர்பில் சபா நாயகருக்கு அறிவிக்கவுள்ளதாக, கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார். (இ-7)



(பொலநறுவை)

பொலநறுவை - வெலிகந்த பிரதேசத்தில் நீர்த்தேக்கம் ஒன்றில் வீழ்ந்து காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது. குறித்த யானையின் சடலம் நேற்று முன்தினம் வனவிலங்குத்துறை அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது. (இ-7)

### மக்களின் மகிழ்ச்சியை அறிய கிராமங்களுக்கு செல்லுங்கள்

(கொழும்பு)

லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து, நாட்டு மக்களிடம் மகிழ்ச்சியா என கேட்பவர்கள், கிராமத்திலுள்ள அப்பாவி மக்களிடம் சென்றால் அவர்களின் மகிழ்ச்சியை கண்டுகொள்ள முடியும் என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ஹிங்குரக்தமனவில் (**Hingurakdamana**) கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

## காலணி அணிந்த பூனை



அழகிய ஊரில் மாவு அரைக்கும் கடை வைத்திருந்த ஒருவர் உடல் நலம் குன்றினார். தனது மூன்று மகன்களை அழைத்து சொத்துகளைப் பிரித்தார். மாவு அரைக்கும் இயந்திரத்தை முதல் மகனுக்கும் கழுதையை இரண்டாவது மகனுக்கும் பூனையை மூன்றாவது மகனுக்கும் கொடுத்தார்.

மாவு அரைத்து கழுதை மீது ஏற்றி வியாபாரம் செய்யலாம் என்பதால் முதல் இரு மகன்களும் ஒன்றாக இருக்க முடிவெடுத்தனர். ஆனால் கடைசித் தம்பியிடம் பூனை மட்டுமே இருந்ததால் அவரை வீட்டை விட்டு விரட்டினர்.

இனி என்ன செய்வது என்று தெரியாமல் நடக்கத் தொடங்கினார். சிறிது நேரத்தில் களைத்துப் போய், மரத்தடியில் படுத்தார். பூனை மெல்லிய பாதங்களால் அவரை வருடியது.

"எஜமானரே, வருத்தப்படாதீங்க. உங்க வாழ்க்கையை மாற்றுவது என் பொறுப்பு. அதற்காக நீங்கள் எனக்கு வாங்கித் தர வேண்டியது ஒரு ஜோடி காலணிகளும் ஒரு கோணிப் பையும்" என்ற பூனையின் அன்பான வார்த்தைகள் இளைஞருக்கு ஆறுதல் தந்தது. கையில் இருந்த பணத்தில் பூனை கேட்ட காலணிகளையும் பெரிய கோணிப் பையையும் வாங்கித் கொடுத்தார்.

ஊருக்கு வெளியே முயல்களைப் பார்த்தவுடன் இரவு உணவு முயல் தான் என்ற முடிக்கு வந்த பூனை, வேட்டையில் இறங்கியது. பசலை இலைகளைக் கோணிப் பையில் போட்டு முயல்கள் வரும் பாதையில் வைத்தது. இலைகளைச் சாப்பிடும் ஆர்வத்தில் கோணிப் பைக்குள் முயல்கள் நுழைந்தன. உடனே கோணிப் பையின் வாயைக் கயிற்றால் கட்டியது. ஒரு முயலை இளைஞரிடம் கொடுத்துவிட்டு, இன்னொன்றை தன்க்காக வைத்துக் கொண்டது பூனை.

ருசி கண்ட பூனை அடுத்த நாளும் வேட்டைக்குக் கிளம்பியது. மீண்டும் கோணிப் பையில் இரு முயல்கள் சிக்கிக் கொண்டன. ஆனால் இந்த முறை முயல்களை அரண்மனைக்கு எடுத்துச் சென்றது.

"மன்னருக்குப் பரிசு கொண்டு வந்துள்ளேன். அவரைக் காண என்னை அனுமதிக்க வேண்டும்" என்று பணிவாக வேண்டுகோள் விடுத்தது பூனை.

உள்ளே சென்று சிம்மாசனத்தில் வீற்றிருந்த மன்னரை வணங்கி, "எங்கள் இளவரசர் கர்ரபாஸ் இந்த முயலைத் தனது அன்புப் பரிசாக உங்களிடம் கொடுக்கச் சொன்னார்" என்று அவர் பாதங்களில் வைத்து மண்டியிட்டது பூனை.

"இளவரசருக்கு நன்றியைத் தெரிவியுங்கள்" என்ற மன்னர், பூனைக்கு விருந்து அளித்து அனுப்பி வைத்தார்.

அந்த ஊரில் பயங்கரமான பூதம் ஒன்று பெரிய கோட்டையில் வசித்துவந்தது. பூனை ஒரு நாள் பூதத்தைப் பார்க்கச் சென்றது. பூனை சிறிய உருவம் என்பதால் பூதம் அதைச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டவில்லை.

"உன்னால் எந்த உருவமாகவும் மாற முடியும் என்று கேள்விப்பட்டேன். அது உண்மையா?" என்று போலியான அக்கறையுடன் கேட்டது பூனை.

"ஆமாம். பிரமாண்ட யானை போலவும் உருமாற முடியும். சின்னஞ்சிறிய சுண்டெலிபோலவும் வடிவம் எடுக்க முடியும்" என்று வர இருக்கும் ஆபத்தை உணராமல் தற்பெருமை பேசியது பூதம்.

திடீரென்று சிங்கத்தைப்போல் வடிவெடுத்து கர்ஜித்தது. அடுத்த நொடியே யானையின் உருவத்தை எடுத்துப் பிளிறியது. பூனை பயப்படுவதுபோல் நடித்தது.

"சரி சரி... பெரிய உருவத்தைக் காட்டி என்னை அச்சுறுத்தியது போதும். என்னை விடச் சிறிய வடிவத்தை எடுக்க முடியுமா? பார்க்க ஆசையாக இருக்கிறது"

"இதென்ன பிரமாதம்? இதோ பார்" என்று சொல்லிக் கொண்டே தனது பிரமாண்ட உருவத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறுக்கிச் சுண்டெலியாக மாறியது. அவ்வளவுதான். விருந்து கிடைத்த சந்தோசத்தில் பூனை ஆக்ரோசமாக அதன் மீது பாய்ந்தது. தந்திரத்தாலும் பேச்சு சாதுரியத்தாலும் பூதத்தை வீழ்த்தியது பூனை.

வீட்டுக்கு ஓடிவந்த பூனை, இளைஞரை ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்று குளிக்கச் சொன்னது. அவர் குளித்துக் கொண்டிருக்கும்போதே அவரது துணிகளை எடுத்து ஒளித்து வைத்தது.

வீதி உலா வந்துகொண்டிருந்த மன்னரிடம் சென்ற பூனை, "எங்கள் இளவரசர் கர்ரபாஸ் குளித்துக் கொண்டிருக்கும்போது யாரோ அவரது துணிகளைத் திருடிச் சென்று விட்டனர்" என்று கண்ணீர் விட்டது.

'தனக்குப் பரிசு அளித்த இளவரசருக்கு உடுக்க உடை கூடக் கொடுக்காவிட்டால் எப்படி?' என்று யோசித்த மன்னர், கைவசம் கொண்டு வந்த உடைகளைக் கொடுத்து உதவினார். இளைஞருக்கு அரசரின் உடை கம்பீரத்தையும் அழகான தோற்றத்தையும் தந்தது. மன்னர் அவரை இளவரசன் என்றே நம்பியதால் தனது தேரில் உட்காரச் சொன்னார். புத்திசாலி பூனை தேருக்கு முன்னால் ஓடியது. அங்கிருந்த வயல், வரப்பு, செடி, கொடி, மரங்களிடம் இங்குள்ளவை அனைத்தும் இளவரசர் கர்ரபாஸ்'க்குச் சொந்தம் என்று சொல்லுமாறு மிரட்டியது. அவையும் ராஜாவிடம் அவ்வாறே சொல்ல, அவரும் மகிழ்ந்தார்.

பூதத்தின் கோட்டை வாசலில் தேரை நிறுத்தச் சொல்லி, "மன்னா, எங்கள் இளவரசர் கர்ரபாஸ்'க்குச் சொத்தமான கோட்டை இது. உள்ளே வந்து இளைப்பாறுங்கள்" என்ற பூனையின் பொய்யை ராஜாவும் நம்பினார்.

தங்கம், வைரம், முத்து, பவளம் என்று கோட்டை முழுவதும் நவரத்தினங்கள் ஜொலித்துக் கொண்டிருந்தன. தனது மகளுக்கு ஏற்ற ஜோடி இந்த இளவரசர்தான் என்ற முடிவுக்கு வந்தார்.

சகல மரியாதையுடன் இளைஞரை அரண்மனைக்கு வரவழைத்து, தனது மகளைத் திருமணம் செய்து கொடுத்தார். வார்த்தைக்கு வார்த்தை இளவரசர் கர்ரபாஸ் என்று ஏன் தன்னை அழைக்கிறார் என்றும் மன்னர் மகளைத் தனக்கு ஏன் கல்யாணம் செய்து வைத்தார் என்றும் அந்த இளைஞருக்குக் கடைசிவரை புரியவே இல்லை. எல்லாம் பூனை செய்த மாயமாக இருக்கும் என்று மட்டும் உறுதியாக நம்பினார். பூனைக்கு வெளியே சென்று வேட்டையாட வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. வாய்க்கு ருசியான உணவைக் கேட்கும் போது கொடுக்கச் சுற்றிலும் ஆட்கள் இருக்கும் போது அதுக்கு என்ன கவலை?

# பொன்மொழிகள்

- தோல்வி என்பது உண்மையை நிலைநாட்ட ஏற்படும் அனுபவம் - பீசுர
- நேர்மையான உழைப்பில் கௌரவம் இருக்கிறது - க்ளீவ் லாண்ட்
- சுதந்திரமாக இரு. எவரிடமும் இருந்து எதையும் எதிர்பார்க்காதே- சுவாமி விவேகானந்தர்
- தொண்டு என்பது அடிமை வேலையன்று. அது தெய்வப் பணியாகும் - திரு.வி.க.
- மனித வாழ்வு என்பது தாமரை இலையில் உருண்டோடும் பனித்துளி போன்றது - தாகூர்
- உழைத்துப் போராடாமல் வெற்றியை அடைய முடியாது - தாமஸ்
- படிப்பு என்ற மெழுகுவர்த்திக்கு ஆர்வமே திரி - யாரோ
- சிந்திக்காமல் பேசத் தொடங்குவது, குறி பார்க்காமல் அம்பை விடுவது போன்றது - ஆஸ்கர் ஒயில்ட்
- மனிதன் தோல்வியின் மூலமே மேலும் புத்திசாலி ஆகின்றான் - விவேகானந்தர்
- மன்னிக்கும் உள்ளத்தில் கடவுள் குடியிருக்கின்றார் - குருநானக்
- நறுமண மலர்களோ மெதுவாக மலரும். களைகளோ வேகமாக வளரும் - ஷேக்ஸ்பியர்
- நாம் படிக்கப் படிக்க நம்மிடமிருக்கும் அறியாமையை அறிந்து கொள்கிறோம் - ஷெல்லி
- சிறிய தவறுகளைத் திருத்திக் கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது- ஸ்ரீ கன்ஃபூசியஸ்
- சிறிய கடன் கடனாளியை உருவாக்கும். பெரிய கடன் எதிரியை உருவாக்கும்-சைரஸ்




❖1806 - கடைசி புனித ரோமப் பேரரசன் இரண்டாம் பிரான்சிஸ் நெப்போலியனுடனான போரில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அப்பேரரசு முடிவுக்கு வந்தது.

❖1952 - இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு இடம் மாறியது.

❖1990 - இலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி என்னும் இடத்தில் பெண்கள், முதியவர்கள் உட்பட 47 தமிழர்கள் இராணுவம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

❖2002 - தமிழ்நாடு ஏர்வாடியில் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த 11 பேர் பெண்கள் உட்பட 28 மனநோயாளிகள் தீ விபத்தில் கொல்லப்பட்டனர்.

❖2006 - திருகோணமலையில் நோயாளரை ஏற்றி வந்த அம்புலன்ஸ் வண்டி எறிகணைத் தாக்குதலுக்குள்ளானதில் ஒரு நோயாளி கொல்லப்பட்டார்.

**பிறப்புகள்**

❖1870 - பரிதிமாற் கலைஞர், தமிழறிஞர், நூலாசிரியர் (இ. 1903)

❖1909 - கே.எஸ்.கோதண்டராமய்யா, ஆந்திரா அரசியல்வாதி (இ. 1984)

❖1911 - ஜி சியான்லின், இந்திய சீன மொழியியல் அறிஞர் (இ. 2009)

❖1915 - ஏ.நாகப்பச் செட்டியார், தமிழகத் தொழிலதிபர் (இ. 1982)

❖1925 - அ.சீனிவாசன், தமிழக இதழாளர், மொழிபெயர்ப்பாளர், விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர்

❖1933 - ஏ.ஜீ.கிறிப்பால் சிங், இந்தியத்துடுப்பாளர் (இ. 1987)

❖1959 - ராஜேந்திர சிங், இந்திய சூழலியலாளர்

❖1970 - எம்.நைட் சியாமளன், இந்திய-அமெரிக்கத் திரைப்பட இயக்குநர்

**இறப்புகள்**

❖1925 - சுரேந்திரநாத் பானர்ஜி, இந்திய அரசியல்வாதி (பி. 1848)

❖1951 - ருக்மிணி லட்சுமிபதி, இந்திய அரசியல்வாதி, சென்னை மாகாண முதல் பெண் அமைச்சர் (பி. 1892)

❖1984 - ஆழிக்குமரன் ஆனந்தன், இலங்கையின் நீச்சல் வீரர், வழக்கறிஞர்

❖2016 - வியட்நாம் வீடு சுந்தரம், தமிழகத் திரைப்பட இயக்குநர், நடிகர், திரைக்கதை ஆசிரியர் (பி. 1941)

**சிறப்பு நாள்**

❖விடுதலை நாள் (ஜமேக்கா பிரித்தானியாவிடம் இருந்து 1962)

❖அணுகுண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் நினைவு நாள் (இரோசிமா, ஜப்பான்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 80 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 80 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 280 | 200 | 240 | 250 | 400 | 200 |
| தக்காளி | 100 | 90 | 90 | 80 | 100 | 110 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 30 | 40 | 40 |
| கோவா | 150 | 140 | 160 | 120 | 160 | 180 |
| கரட் | 200 | 320 | 240 | 140 | 300 | 400 |
| பூசணி | 80 | 80 | 70 | 60 | 80 | 100 |
| புடோல் | 50 | 70 | 80 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 70 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 120 | 100-130 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 100 | 105 | 110 | 100 | 120 | 110 |
| பாகற்காய் | 200 | 120 | 160 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 50 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 110 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 60 | 80 | 50 | 60 | 80 | 50 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 | 130 | 120 | 180 |
| பீற்றூட் | 150 | 70 | 140 | 120 | 140 | 140 |
| கறிமிளகாய் | 200 | 250 | 240 | 200 | 160 | 400 |
| முருங்கைக்காய் | 50 | .90 | 80 | 60 | 80 | 30 |
| போஞ்சி | 200 | 240 | 200 | – | 250 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 60 | 80 | 80 | 40 |
| கீரை-1பிடி | 20 | 20 | 30 | 30 | 30 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 50 | 50 | 60 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 45 | 30-50 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 150 | 130 | 140 | – | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 140 | 120 | 120 | 200 | 100 |
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 40 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 50 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 40 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 50 | 50 | 60 | 40 |

பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருங்கள்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உயர்தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு குந்தகம் செய்யாதீர்கள்

2018ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது.

பரீட்சையில் தோற்றுகின்ற அத்தனை மாணவர்களுக்கும் இறைவனின் அருளாசியை வேண்டுவதுடன் எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

க.பொ.த உயர்தரப் பரீட்சைதான் மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது. பதின்மூன்று ஆண்டுகள் நீடித்த பாடசாலைப் படிப்பை நிறைவு செய்கின்ற பரீட்சையாகவும் இது அமைகின்றது.

எங்கள் மாணவச் செல்வங்களின் தலைவிதியைத் தீர்மானிக்கின்ற உயர்தரப் பரீட்சையில் தோற்றுகின்ற மாணவர்களுக்கு நாம் செய்யக்கூடிய உதவி என்னவெனில்,

சமூகச் சூழலால் ஏற்படுகின்ற குழப்பங்களைத் தவிர்த்து மாணவர்கள் எந்த இடையூறுகளுமின்றி பரீட்சைக்குத் தங்களைத் தயார் செய்வதற்கான உதவிகளைச் செய்வதாக இருக்கும்.

இங்கு சமூகச் சூழல் என்பது ஆலயங்களில் ஒலிபெருக்கியில் ஒலிக்கின்ற பாடல்களின் ஒலியைக் குறைத்தும் நிகழ்வுகளின் சத்தங்களைத் தவிர்த்தும் மாணவர்கள் கற்பதற்கு உதவுவதாகும்.

இத்தற்கு மேலாக மின்சாரத் தடையை எச்சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ளாமல் தொடர்ச்சியாக மின்சாரம் கிடைப்பதற்கு மின்சார சபை தனது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

எனினும் உயர்தரப் பரீட்சை, சாதாரண தரப் பரீட்சைக் காலங்களில் மின்வெட்டை அமுல்படுத்துகின்ற ஒருமுறைமை வடபுலத்தில் இருப்பதாகவும் இஃது எங்கள் மாணவர்களின் படிப்பைக் குழப்புவதற்கான திட்டமிட்டவேலை என்றும் பலரும் குறை கூறிக்கொள்கின்றனர்.

இதுபற்றி மின்சார சபையினர் அறியாமல் இருந்தாலும் நாம் அறிந்தவற்றைத் தெரியப்படுத்துவது ஓர் ஊடகத்தின் தலையாய கடமை என்ற அடிப்படையில் மேற்போந்த தகவலை முன்வைத்துள்ளோம்.

இதற்காக, வட பகுதியில் கடமையாற்றும் இலங்கை மின்சார சபையின் உத்தியோகத்தர்களின் உயர்ந்த சேவையை குறைத்து மதிப்பிடுவதாக யாரும் கருதிவிடக்கூடாது.

மேலாக, நாம் இங்கு வலியுறுத்துவதெல்லாம் பரீட்சைக்காலங்களில் எக்காரணம் கொண்டும் மின் தடையை ஏற்படுத்தாதீர்கள் என்பதுதான்.

இதுவிடயத்தில் இலங்கை மின்சார சபையின் வடபுலத்து அதிகாரிகள் உரிய நட வடிக்கை எடுப்பர் என நம்பலாம்.

இவற்றுக்கு மேலாக, பரீட்சைக் காலங்களில் பொது நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள், ஆலயத் திருவிழாக்கள் போன்றவற்றில் ஒலிபெருக்கிப் பயன்பாட்டினை மட்டுப்படுத்துவதுடன் மிகக்குறைந்த ஒலியுடன் அவற்றை இயக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களும் உள்ளுராட்சி அமைப்புகளும் வலியுறுத்த வேண்டும்.

13 ஆண்டுகள் பாடசாலையில் படித்து பட்டப் படிப்பைத் தொடர்வதற்காக நடைபெறுகின்ற உயர்தரப் பரீட்சையில் தோற்றுகின்ற மாணவர்களுக்கு; மின்தடையும் ஒலிபெருக்கிகளின் சத்தமும் அயல் அட்டத்தில் நீண்ட நெடு ஒலியில் இசைக்கப்படும் பாடல்களும் இடையூறாக இருந்தன என்றால், இதைவிட்ட அநியாயம் எதுவுமாக இருக்காது என்பதால் நாம் அனைவரும் எங்கள் மாணவர்களுக்காக பொறுப்புடன் நடந்து கொள்வோம்.

# பாதுகாப்பு உறவுகளை முன்னேற்றுவதற்காக இலங்கைக்கு அமெரிக்கா நிதியுதவி

## அமெரிக்க இராஜாங்க செயலாளர்

(சிங்கப்பூர்)

இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு உறவுகளை முன்னேற்றுவதற்காக, இலங்கை உள்ளிட்ட 27 நாடுகளுக்கு அமெரிக்கா நிதியுதவி வழங்கவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ அறிவித்துள்ளார்.

கிழக்காசிய வெளியுறவுத்துறை அமைச்சர்களின் உச்சி மாநாடு நேற்று முன்தினம் (சனிக்கிழமை) சிங்கப்பூரில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாடு கடந்த குற்றங்களைத் தடுக்கும் வகையிலேயே பாதுகாப்பு நிதியுதவியாக இத்தொகை வழங்கப்படுவதாக மைக் பொம்பியோ குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில், இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு உறவுகளை முன்னேற்றுவதற்காக, இலங்கை உள்ளிட்ட 27 நாடுகளுக்கே 300 மில்லியன் டொலர் பாதுகாப்பு உதவிகள் அமெரிக்காவினால் வழங்கப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் இலங்கை, பங்களாதேஷ், இந்தோனேசியா, மொங்கோலியா, நேபாளம், பசுபிக்தீவுகள், பிலிப்பைன்ஸ், வியட்நாம் உள்ளிட்ட 27 நாடுகள் அமெரிக்காவின் இராணுவ உதவியைப்பெற்றுக்கொள்ளவுள்ளன.

கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்தல், மனிதாபிமான உதவி, அனர்த்த மீட்பு, அமைதிகாப்பு திறன்களை உள்ளடக்கிய தேவைகளுக்காக 300 மில்லியன் டொலர் வெளிநாட்டு இராணுவ நிதியாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன், அனைத்துலக போதைப்பொருள் மற்றும் சட்டத்தை நடைமுறைப படுத்தலுக்கான 8.5 மில்லியன் டொலர் நிதியுதவி, நாடு கடந்த குற்றங்களுக்கு எதிரான நிதியுதவியாக வழங்கப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-78)

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, கனகபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தது டன் இருவர் படுகாயமடைந்துள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம்இரவு 7.30 மணியளவில் கிளிநொச்சி பொலிஸ பிரிவுக்குட்பட்ட கனகபுரம் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இரு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவத்தில், மோட்டார் சைக்கிளைச செலுத்திய நபர் உயிரிழந்துள்ளதாகவும், மற்றைய மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளிற்காக கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-78)

## திறப்பு விழா

புத்தாக்க ஆணைக்குழுவின் வடக்கு மாகாணத்துக்கான பிராந்திய அலுவலக திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தில் நடைபெறவுள்ளது. (ம-9.78)

## புலமைப்பரிசில் பரீட்சை எந்த சிக்கலும் இன்றி நிறைவடைந்துள்ளது

### பரீட்சைத் திணைக்களம் தெரிவிப்பு

3050 நிலையங்களில் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை எந்த சிக்கல்களும் இன்றி நிறைவடைந்ததாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த முறை புலமைப் பரிசில் பரீட்சையில் 3 லட்சத்து 55 ஆயிரத்து 326 மாணவர்கள் பங்குபற்றினர்.

இதேவேளை, நேற்று இடம்பெற்ற பரீட்சையின் வினாத்தாள்களை கையிருப்பில் வைத்திருத்தல், விற்பனை செய்தல், அச்சிடல் மற்றும் வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பரீட்சையில் விடையளித்தமை மற்றும் பரீட்சை தொடர்பில் தேவையற்ற கேள்விகளை மாணவர்களிடம்கேட்கவேண்டாம் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஊடக அறிக்கை மூலம் பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-78)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**அர்ச்சனைக்கு உபயோகப்படாதவை எவை?**

விநாயகருக்கு அர்ச்சனை- எருக்கு இலை

மகாவிஷ்ணு- அட்சதை, ஊமத்தைப்பூ, எருக்கம் பூ

துர்க்கை- அறுகம்புல் கூடாது

சூரியபகவான்- வில்வம் கூடாது

*(தொடரும்)*

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பொருளும் நிகழ்ச்சியும்



நீங்கள் எழுதுவதற்காகப் பேனாவைக் கையில் வைத்திருக்கின்றீர்கள். அதையே நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். பேனாவைப் பார்த்து இது பொருளா அல்லது நிகழ்ச்சியா என்ற வினா எழுப்புங்கள். கையினால் தொட்டு உணர முடிவதாலும் கண்ணால் பார்த்து உணர முடிவதாலும் பேனா ஒரு பொருள்தான் என்று கருத நேரும்.

மேலே செல்வோம். அந்தப் பேனாவை எரியும் நெருப்பிலிட்டால் என்ன ஆகும். எரிந்து சாம்பலாகிப் போகும். பேனா என்ற வடிவம் இப்போது அதற்கு இல்லை. பேனா எங்கே? அழிந்து விட்டது. இவ்வாறு அழிவது பொருளாகுமா? பேனா என்னவாயிற்று? ஆராய்வோம். நெருப்பிலிட்டவுடன் அதில் இணைந்திருந்த பலதரப்பட்ட அணுக்கள் வெப்பத்தால் கிளர்ச்சியூட்டப் பெற்று இயக்க விரைவு பெற்று ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போயிற்று. அதனால் அணுக்கள் கூட்டால் அமைந்த பேனா என்ற வடிவம் மறைந்து போயிற்று. எது பேனாவாகக் காட்சியளித்தது? அணுக்கள். பேனா பொருளன்று. அணுக்கள் கூடிய ஒரு நிகழ்ச்சி தான் என்பது விளங்கக் கண்டோம். பேனா மட்டுமென்ன? நாம் காணும் இப்பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள். தோற்றங்கள் அத்தனையும் அணுக்களின் கூட்டு இயக்கம் தானே? ஒரு கூட்டுத் தோற்றமாக நாம் காணும் எப்பொருளிலும் ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கிறன. அவற்றின் இடையில் உள்ள இடைவெளியைக் காணும் திறமை புலனறிவுக்கு இல்லை.

அதனால் ஒரே கொத்தாக ஒரு தோற்றம் காட்சியாகின்றது. இவ்வாறு இந்த அடிப்படையில் ஆராய்ந்தால் பிரபஞ்சத் தோற்றங்கள் அத்தனையும் நிகழ்ச்சிகளே என்ற முடிவுக்கு வருகிறோம். அடுத்து ஒரு வினா. எல்லாத் தோற்றங்கட்கும் அடிப்படைத் துகளான அப்பரமாணு பொருளா? நிகழ்ச்சியா? இதனையும் ஆராய்வோம். அப்பரமாணுவின் இயக்கத்தைக் கழித்து யார் அல்லது எது இயங்குகின்றது என்று உணர்ந்து கொள்ளலாமல்லவா? அது தானே பொருளாக இருக்க முடியும்? பரமாணுவின் இயக்கத்தைக் கழித்துப் பார்த்தால் என்ன மிஞ்சும்? ஒன்றுமேயில்லை. வெட்டவெளி தான் மீதி. அகன்று நின்று பூரணமாக இருக்கும் வெட்டவெளி என்ற பொருள் தான் நுண்ணிய இயக்கத்தில். கண்ட நிலையில் பரமாணுவாக இருக்கின்றது. இப்போது பொருள்நிலை விளங்குகிறதல்லவா? வெட்ட வெளி என்ற ஒரு நிலையே பொருள் நிலையாகும். அதன் இயக்க நிகழ்ச்சியே பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுக்களின் கூட்டு அல்லது தொடர் நிகழ்ச்சியாகும்.



இணுவில் கலாஜோதி முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் உரையாற்றுவதையும் மாணவர்களின் நிகழ்வுகளையும் வெற்றியீட்டிய மழலைகளுக்கு பரிசில் வழங்குவதையும் கபடிப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்:- சக்தி)




தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வருடா வருடம் நடத்தும் தேசிய இளைஞர் விளையாட்டு விழாவிற்காக பங்கு பெறுநர்களை தெரிவுசெய்யும் நிகழ்வின் இரண்டாவது கட்டமாக மன்னார் மாவட்டத்தில் வீர. வீராங்கனைகளைத்தெரிவு செய்யும் 30 ஆவது இளைஞர் விளையாட்டு விழா நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் மன்னார் பொது மைதானத்தில் மன்னார் மாவட்ட உதவிப் பணிப்பாளர் மஜித் தலைமையில் ஆரம்பமானது. தேசிய இளைஞர் சேவை மன்றமும் மன்னார் மாவட்ட சம்மேளனமும் இணைந்து பிரதேச ரீதியில் வெற்றி பெற்ற இளைஞர். யுவதிகளை தேசிய ரீதியான போட்டிக்குத் தெரிவு செய்யும் முகமாக குறித்த விளையாட்டு விழா ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி பூலோகராஜா ஒழுங்கமைப்பில் தேசிய பிரதிநிதி ஜோசப் நயன் தலைமையில் குறித்த விளையாட்டு விழா மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (க)

# கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் மின்னொளியிலான கரப்பந்தாட்டப் போட்டிகள்



(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான பிரிவு Bற்கு உரிய போட்டிகள் கடந்த சனிக்கிழமை மாலை ஆரம்பமாகியது. முதலாவதாகவயவை ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி எதிர் கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதின. இதில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 25-21, 28-26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இரண்டாவது ஆட்டம் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக்கழக B2 அணி எதிர் அண்ணா விளையாட்டுக்கழக அணிகள் மோதியிருந்தன. அண்ணா விளையாட்டுக் கழக அணி உரிய நேரத்திற்கு சமுகமளிக்காமையினால் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக்கழக B2 அணிக்கு வெற்றி வாய்ப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் நவஜீவன் விளையாட்டுக்கழக B2 அணியானது காமாட்சியம்பாள் விளையாட்டுக்கழக B2 அணியை எதிர்கொண்டது. இதில் நவஜீவன் விளையாட்டுக்கழக B2 அணி 25-22, 25-21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற நான்காவது ஆட்டத்தில் சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணி கலைஒளி விளையாட்டு கழக அணியை எதிர்கொண்டது. இதில் சிவகுமாரன் விளையாட்டுக் கழக அணி 25-09, 28-26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்ட கிண்ண அறிமுக நிகழ்வில் நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டார். குறித்த விளையாட்டுக் கழகத்திற்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கியை திறந்து வைத்த அவர் குறித்த உதைபந்தாட்டப் போட்டிக்கான கிண்ணத்தையும் அறிமுகம் செய்து வைத்தார். (க-312)



குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் குருநகர் கலையரங்க முன்றலில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.வலய முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் தம்பிராசா சிவகுமார், சிறப்பு விருந்தினராக குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்திரு. சாள்ஸ் யஸ்ரின் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (க-106)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் நாடளாவிய ரீதியில் 32 ஆயிரத்து 605 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 7,249பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்தனர். அதனை தொடர்ந்து டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.

எனினும் கடந்த ஜூலை மாதம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து ள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்ட ப்பட்டுள்ளது. (ம-78)

## சைக்கிளை திருடமுற்பட்ட...

பார்த்த பொதுமக்கள் அவர்களை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸார் இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்று பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் குருநகர் பகுதியை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (ம-9,78)

## தமிழின அழிப்பாளர்...

தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முதலமைச்சரை எதிர்த்து அவரைக் கடுமையாக விமர்சனம் செய்பவர்களின் பின்னணிகளை அம்பலப்படுத்துவது, முன்னைய ஆட்சியில் இவர்கள் தமிழின அழிப்பில் ஆற்றிய விடயங்களை வெளிப்படுத்துவது என்ற வகையில் அவை தொடர்பான தகவல்களையும் தரவுகளையும் திரட்டுகின்ற பணியில் இளைஞர் அணி ஒன்று ஈடுபட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இந்தத் தகவல்களை உறுதிப்படுத்த முடியவில்லை. (ம-78)

## கல்வி மட்டும்தான்...

தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆசிரியன் எனப்படுபவன் மாணவர்களின் வழிகாட்டியாக அவர்களின் முன்னேற்றத்திற்கான ஒரு முன்னோடியாகத் தன்னை அமைத்துக் கொண்டு மாணவர்களை முறையாக வழிகாட்டி அவர்களையும் பயன் கொடுக்கும் நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு பாடுபடவேண்டும். கல்வி தான் எமது ஒரேயொரு திடமான பாதுகாப்பு.

ஆசிரியத் தொழில் என்பது இறைபணிக்கு ஒப்பானதாகும். உங்களிடம் கையளிக்கப்படுகின்ற மாணவர்கள் புதிய புதிய விடயங்களை தேடிக்கற்பதற்கு ஆவலாக உள்ளார்கள் என்பதை மனத்தில் இருத்தி புதிய புதிய விடயங்களை மிகத் தெளிவாகவும் ஆழமாகவும் உறுதியாகவும் அவர்களின் மனங்களில் பதியக்கூடிய வகையில் கற்பித்தல்களை நீங்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இன்று அரச சேவைகளில் பலரும் தமக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்களைப் பற்றியே சதாகாலமும் சிந்தித்தவர்களாக காணப்படுகின்றார்கள். இந்த நிலை மாற்றப்படல் வேண்டும்.

மேலும் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கத் தயங்குகின்ற ஆசிரியர்கள் பிரத்தியேகக் கல்வி நிறுவனங்களில் விடியற் காலை மற்றும் மாலை நேர வகுப்புக்களில் சிறப்பாக செயற்படுவது விந்தைக்குரியது. இவை யாவும் எமது ஆசிரிய ஆசிரியைகள் பணத்திற்கும் சொகுசு வாழ்க்கைக்கும் தம்மை அடிபணிய வைத்திருப்பதையே எடுத்துக்காட்டுகினறது என மேலும் தெரிவித்தார். (ம-9,78)

## கொழும்பு நோக்கி...

பட்டி (பிறேக் லிவர்) இழுக்கப்பட்டு புகையிரதமானது இரணைமடு உட்கிராமம் ஒன்றிற்கு அருகில் நிறுத்தப்பட்டது.

இதனால் அப் பகுதி கிராம மக்கள் ஒன்று கூடியதையடுத்து அங்கு பதற்றமான சூழல் நிலவியது.

இருந்த போதிலும் நடந்த சம்பவம் தெளிவுபடுத்தப்பட்டதையடுத்து, புகையிரத பயணம் தொடர்ந்ததுடன் காயமடைந்தவர் அடுத்த புகையிரத நிலையம் ஊடாக வைத்தியசாலையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது. (ம-78)

## மகிந்தவும் மைத்திரியும்...

பொழுதும் மறக்க முடியாது. அரசாங்கம் அரசியல் தீர்வினை வழங்க முன்வந்தாலும் கடும்போக்காளர்களின் செயற்பாட்டின் காரணமாக அரசியல் தீர்வு ஒரு தொடர் கதையாகவே காணப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மகிந்தவுடன் ஒன்றிணைந்தால் மாத்திரமே அரசியல் தீர்வு கிடைக்கப் பெறும் என்று குறிப்பிட்டுள்ளமை நடைமுறைக்கு பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய அரசாங்கத்தை தோற்றுவிக்க முக்கிய இடம் வகித்தார். தமிழ் மக்களும் அரசியல் தீர்வு கிடைக்கப் பெறும் என்ற காரணத்தினாலே தேசிய அரசாங்கத்தை தோற்றுவித்தனர். அரசியல் தீர்வு விடயத்தில் ஒருவரை பிறிதொருவர் கைகாட்டிவிட்டு விலகிவிட முடியாது. அனைவரும் ஒன்றிணைந்தே புதிய அரசியலமைப்பினை உருவாக்க வேண்டும் என்றார். (ம-78)

## கொக்குவில் பகுதியில்...

இளைஞர்களில் ஒருவரும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் காயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் விபத்துக்குள்ளான இளைஞரில் ஒருவரை பொலிஸார் சப்பாத்துக் கால்களால் உதைந்ததாக தெரிவித்து அப்பகுதியை சேர்ந்த மக்கள் கொதிப்படைந்து நின்றதால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்ற நிலை காணப்பட்டது.

அதன் பின்னர் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. விபத்துக்குள்ளான இளைஞர்களின் மோட்டார் சைக்கிளை கோப்பாய் பொலிசார் எடுத்து சென்றுள்ளதுடன் குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9,78)

## முல்லைத்தீவு மாவட்டத்தில்...

பதற்கு, தொல்பொருள் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா குற்றஞ் சாட்டியுள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின், செல்வபுரம் மாதிரி வீட்டுத்திட்ட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் ஊடாக, தமிழர்களின் பூர்வீகக் காணிகள், தொல்பொருளியல் திணைக்களத்தால் கையகப்படுத்துவதற்கு பல சூழ்ச்சிகள் நடைபெற்று வந்தனவெனவும், அண்மையில் 60 அடி உயரமான விகாரை, ஓய்வு மண்டபங்களை நிர்மாணிப்பதற்கு, சம்பந்தப்பட்ட அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார். (ம)

## தந்தையின் உடலத்தை...

மாணவி கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர் மாணவியின் வீட்டிற்கு வந்து அவருக்கு ஆறுதல் கூறி அழைத்துச் சென்று இவ்வாறு பரீட்சைக்கு தோற்ற வைத்துள்ளதாக தெரியவருகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு உந்துருளியில் பயணித்துக்கொண்டிருந்த மாணவியின் தந்தை காட்டு யானை தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 37 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-78)

# எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பான தீர்மானம் இன்று

### ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் எதிர்கட்சித் தலைவராக இரா.சம்பந்தனை நீடிப்பதா? இல்லையா? என பது தொடர்பில் இன்று தீர்மானமொன்றை அறிவிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

பொலநறுவை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த அமைச்சரான மகிந்த அமரவீர, எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிற்கு குமார வெல்கம மற்றும் தினேஷ் குணவர்தன ஆகியோரை இருவேறு தரப்பினர் பரிந்துரை செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர்,

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானம் என்ன என சில நாட்களாக தொடர்ந்து கேள்வியெழுப்புகின்றனர். எனக்கு சபாநாயகர் கடிதமொன்றினை அனுப்பியுள்ளார். எனினும் அதை இன்னும் கையிலெடுக்க முடியவில்லை. பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த பல இடங்களுக்கு செல்கின்றேன். வீடு திரும்பியதுமே அந்த கடிதத்தை வாசிப்பேன். எனினும் எனது செயலாளரினூடாக கடிதத்தில் கூறியுள்ள விடயம் தொடர்பில் அறிந்து கொண்டேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்கள், கட்சியின் பிரதானிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு இன்று சிறந்த தீர்மானமொன்றினை மேற்கொள்வோம். யார் எதிர்க்கட்சித் தலைவராக இருக்க வேண்டும்? இருப்பவரே தொடர்ந்து இருக்க வேண்டுமா? என சபாநாயகருக்கு நாம் தெரிவிப்போம் என்றார்.

இதுவரையிலும் எதிர்க்கட்சித் தலைமை பொறுப்பினை எனக்கு தாருங்கள் என யாரும் கோரவில்லை எனத் தெரிவித்த அமரவீர, இதுதொடர்பான எண்ணம் தொடர்பிலேயே சபாநாயகர் கேள்வியெழுப்பியுள்ளதாக கூறினார். எனினும் ஊடகங்களில் மகஜன எக்சத் பெரமுன சார்பில் தினேஸ்குணவர்தனைவை எதிர்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என ஒரு தரப்பினர் யோசனை முன்வைத்துள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அப்பதவி கிடைக்க வேண்டும் எனக் கூறுவோர் குமார வெல்கமவிற்கு அந்தப் பதவியினை வழங்குமாறு கோரிக்கை விடுத்து வருவதனைக் காணமுடிகிறது என்றும் அவர் கூறினார். மேலும் குறிப்பிட்ட அவர்,

பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் வெல்கமவை நியமிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர். எனக்கும் சிலர் அழைப்புக்களை மேற்கொண்டு சுதந்திரக் கட்சிக்கே எதிர்க்கட்சி பொறுப்பு வரவேண்டும் என தெரிவித்தனர். கலந்தாலோசித்த பின்பு அது தொடர்பில் சிறந்த முடிவொன்றை எடுப்போம் எனத் நான் அவர்களுக்கு தெரிவித்தேன் என்றார். (ம-78)

# அனைவரும் விமர்சிக்கும் அளவிற்கு விஜயகலா பெரும் குற்றவாளி அல்ல

### ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

அனைவரும் விமர்சிக்கும் அளவிற்கு விஜயகலா மகேஸ்வரன் பெரும் குற்றவாளியல்லர். வடக்கில் இடம்பெறும் குற்றச்செயல்களுக்காக ஆதங்கப்பட்டே அவர் கருத்து வெளியிட்டுள்ளார் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையொன்றில் விடுதலைப் புலிகள் இருந்திருக்க வேண்டுமென கூறியமை பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தி, இறுதியில் அவர் தமது இராஜாங்க அமைச்சர் பதவியையும் துறந்தார். இதுகுறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைக் குறிபபிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் அனைவரும் அவரது உணர்வுகளை விளங்கிக்கொள்ள வேண்டும். வடக்கில் அதி கரித்துவரும் குற்றச் செயல்களின் பின்னணி யிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின் றார்.

யாழில் இடம்பெற்ற சிறுமியின் உயிரிழப்பு அவரைப் பாதித்ததால் பாச உணர்வால் தூண்டப்பட்டு அடிமனதில் இருந்து வந்த வார்த்தையாக அவரது உரை அவ்வாறு இடம்பெற்றிருக்கலாம்.

நாடாளுமன்ற சகபாடிகள், அமைச்சர்கள் உள்ளடக்கிய சபையினரை கவரும் நோக்கோடு விளைவுகளைப்பற்றி சிந்திக்காமல் ஆற்றிய உரையாகும்.

நாட்டின் இறைமை பற்றி சத்தியப்பிரமாணம் எடுத்த பின்பு விஜயகலா ஏதாவது தவறு செய்திருந்தார் என்றால், அவ்வாறே சத்தியம் செய்த சில அரசியல்வாதிகள் தவறாக செயற்படுகின்றனர். அவ்வாறான அரசியல்வாதிகளின் செயற்பாட்டுடன் ஒப்பிடுகையில் விஜயகலா பெரும் குற்றவாளியல்லர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-78)



பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களை வரவேற்பதுபோல் புலமைப் பரிசில் பரீட்சை எழுதி மண்டபத்திலிருந்து வெளிவரும் மாணவர்களை வரவேற்று குதூகலிக்கும் பெற்றோர். (ம-9,78)

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.08.05 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1842 |

| ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| K | 01 | 08 | 56 | 79 |

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 2018-08-05 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 32 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|
| U | 09 | 48 | 52 | 61 |

தேசிய லொத்தர் சபை

### நீரோகா

| | |
|---|---|
| திக்தி | 2018/08/05 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 429 |

| லக்கினம | வெற்றி இலக்கங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| மகரம் | 28 | 30 | 37 | 59 | 38 |

தேசிய லொத்தர் சபை

## மக்கள் எம்மை...

போதே அவர் இதனை கூறியுள்ளார். உலகில், உலகமயமாக்கல் நடந்து முடிந்து விட்டது. இலங்கை உலக மயமாக்கலின் ஒரு கிராமம் மாத்திரமே.

சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளியிட கூடிய அரச நிர்வாகம் தேவை என்பதற்காக மக்கள் தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தனர்.

அரசாங்கம் அனைத்து தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தும் போது, சில நபர்கள் அதனை அரசாங்கத்தில் பலவீனம் என கருதுகின்றனர்.

ஓரளவு அடக்குமுறையை மேற்கொண்டால், அது நல்லாட்சி எனக் கூறுவார்கள். இப்படி பல்வேறு மனநிலை கொண்டவர்கள் இருக்கின்றனர் எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (ம-78)

## தமிழ் மக்களை...

கொள்ள முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் தீர்வு விடயத்திற்கு மாத்திரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்தில் செல்வாக்கு செலுத்துகின்றனர். எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தன் நாட்டில் உள்ள பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்களின் எதிர் கட்சி தலைவர் என்ற விடயத்தை ஒரு போதும் உறுதிப்படுத்தியதில்லை.

வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து நிறைவேறாத அரசியல் தீர்வு தொடர்பில் குறிப்பிட்டு தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து வைக்க பொது எதிரணி பூரண ஒத்துழைப்பு வழங்கும் அரசியல் தீர்வு தான் பாதிக்கப்பட்ட மக்களை திருப்திபடுத்தும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (ம-78)

## ஆணைக்குழுவி...

உள்ளிட்டவையை தடுப்பது தொடர்பில் குறித்த காவற்துறை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-78)


**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**



(C-3398)
UK – 550 /=Kg
கனடா – 900 /=Kg
ஜேர்மனி – 700 /=Kg
நெதர்லாந்து – 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்
UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 1100/-
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும்
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம், (முட்டாசு கடைச் சந்தி அருகாமை)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
18, பிரதான வீதி, நெல்லியடி
கிளிநொச்சி, மன்னார்.
077 755 4528
3-5 Working Days
DHL aramex SKYNET



**PERSONAL CLASS**
**Physics A/L - 2019**

● "அலைகளும் அதிர்வுகளும்"
ஆரம்பம்: 08.08.2018 புதன் மாலை 6 மணி
ஆசிரியர்: திரு.ம.ஸ்பெல்மன் (BSc, PGDE)
இடம்: 10/10 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில் அருகாமை)
தொ.பே: 077 611 6724
(5275)

● விரும்பிய பகுதியைக் கற்பதற்கு
✦ Personal Class ஆகவும்
✦ Group Class ஆகவும்
கற்க விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.



**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(5256)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



**வாடகைக்கு வீடு தேவை**

யாழ் மாநகரசபைக்கு அண்மையான பகுதியில் சிறிய குடும்பம் வசிப்பதற்கான வீடு வாடகைக்குத் தேவை. (5262)
தொடர்பு: 0777078292




**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
(சி-3437)

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 21.05.1948
விண்ணில் 01.08.2013

### ஆனந்தன் செல்வநாதன்
(உரிமையாளர், அரியாலை மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம்)

தலைமகனாய் தலைவனாய் தரணிபோற்றும் தந்தையாய்
நிலந்தனிலே என்றும் நிறைவோடு வாழ்ந்தவரே
நிலையாக நினைவுகளில் வாழுகின்ற நிலைதந்து
நிறைந்ததுவோ நான்காண்டு நித்தமும் மறவோமே!
நன்றாய் வளர்த்து நல்வழிகள் காட்டியெமை
என்றும் சிறப்புடனே வாழவைத்த அப்பாவே!
சென்றிடினும் வாழ்நாளில் எம்சிந்தையிலே வாழ்வீர்
என்றினி உங்கள் எழில்வதனங் காண்போம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


22, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-3449)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 08.07.2018 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்



மலர்வு 26 . 02 . 1939
உதிர்வு 08 . 07 . 2018

### அமரர் மருதை கிருஸ்ணசாமி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் மற்றும் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் நாளை (07.08.2018) செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதமாய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உங்களை அன்புக்கரம் கூப்பி அழைக்கின்றோம்.

அத்துடன் எங்கள் அன்புத்தெய்வம் நோயுற்றிருக்கும் போது சகல வழிகளிலும் அவருக்கு மருத்துவத்தை மேற்கொண்ட ஒட்டுசுட்டான் வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை (மாஞ்சோலை வைத்தியசாலை) வைத்தியர்களுக்கும், தாதிமார்களுக்கும், பணியாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவிப்பதோடு அவரது மறைவுச் செய்தியினை அறிந்து நேரடியாகவும், தொலைபேசி வழியாகவும், முகப்புத்தகம் மூலமாகவும் அஞ்சலி செய்திகள், பதாகைகள் மூலமாகவும், அஞ்சலி உரையாற்றிய பாடசாலை அதிபர் அவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் ஒத்தாசை வழங்கிய நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவிக்கின்றோம்.

- மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமக்கள்

(சி-3440)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.